
சங்கரரும் ஷண்மதமும்

March 2007

# தமிழர் தகவல்

இலண்டன்

## Tamils' Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest




பிரமாண்டமாய் !

பிரமாண்டமாய் !

# Vaani

## Cash & Carry

விரைவில்

தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக
வாடிக்கையாளருக்கு

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2037
விய - பங்குனி

மலர் : 04

இதழ் : 45
மார்ச் 2007

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். " - குறள்

## இந்தியாவின் மௌனம் கலையட்டும்

கடந்த டிசம்பர் மாத இறுதியில், இலங்கையின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து உரையாடிய நிகழ்ச்சியை நாம் அறிவோம். இந்தியாவிற்கும் ஈழத்துக்கும் இடையிலான உறவில் காணப்பட்ட ஓர் இறுக்கம் ஏறத்தாழ 16 ஆண்டுகளுக்குப் பிறகு சற்றுத் தளர்ந்தது குறித்து நாம் அனைவரும் மகிழ்ந்தோம். அது ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும் என்றும் நம்பினோம். ஆனால் எக்காரணத்தினாலோ மீண்டும் அந்த இறுக்கம் பற்றிக் கொண்டுவிட்டது. தண்ணீரில் உள்ள பாசியை கைகளால் விலக்கினால், அந்த நிமிடத்தில் அது சற்று விலகும். அடுத்த நிமிடமே மீண்டும் சேர்ந்துகொள்ளும். நம் நிலமையும் அப்படித்தான் ஆகிவிட்டதோ என்று ஓர் அச்சம் எழுகின்றது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 5 ஆண்டுகளைக் கடந்து விட்டது. எந்த நேரமும் கடும் போர் மூளக்கூடும் என்பதே அனைவருடைய எண்ணமாகவும் உள்ளது. போர் நிறுத்த காலத்திலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தாக்குதல்கள் நடைபெற்றன என்றாலும், இன்றைய நிலையைப்போல் அதனைக்கூற முடியாது.

புலிகள் சமாதானத்தை விரும்புவதில்லை என்னும் பொய்யை, புனைந்துரையைத் தமிழ் இன எதிரிகள் திட்டமிட்டே பரப்புகின்றனர். 2002 பிப்ரவரியில் ஒப்பந்தம் கையொப்பமிடப்படுவதற்கு முன்பே, 2001 டிசம்பர் மாதத்திலேயே புலிகள் தன்னிச்சையாகப் போர் நிறுத்தம் அறிவித்தனர் என்பதுதான் உண்மை. கிருஸ்துமஸ் விழாவை ஒட்டியும், பொங்கல் திருநாளை ஒட்டியும் போர் நிறுத்தத்தைப் புலிகள் அறிவித்தபோதும், சிங்கள அரசு தன் தாக்குதலை நிறுத்தவில்லை. அதற்குப் பிறகும் இரண்டு மாதங்கள் அரசின் தாக்குதல் தொடர்ந்துகொண்டேதான் இருந்தது. அந்த அரசைத்தான் சமாதான விரும்பி என்று சிலர் கூறுகின்றனர்.

உண்மையில், சில மாதங்களுக்குப் பிறகு சிங்கள அரசு சமாதான உடன்பாட்டிற்கு முன்வந்ததே கூட, மிகப்பெரிய உள்நோக்கத்தோடுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. தொடர்ந்து பலவீனப்பட்டுக் கொண்டிருந்த சிங்கள அரசுக்கு கொஞ்சம் கால அவகாசம் தேவைப்பட்டது. அதனால்தான் ஒப்பந்தத்தில் அவர்கள் கையொப்பமிட்டனர்.

போர் நிறுத்த காலத்தில், ஆயுதங்களைச் சேர்த்துக் கொள்ளும் பணியிலும், புலிகள் அமைப்பை உடைக்கும் பணியிலும் அவர்கள் முனைப்புக் காட்டினர். இரண்டிலும் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்ற பின் இப்போது மீண்டும் போருக்கு அணியமாகின்றனர்.

இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு அண்மையில் உள்ள பெரிய நாடான இந்தியா, இப்போதேனும் தன் மௌனத்தைக் கலைத்துக் கொள்ள வேண்டும். எல்லா நிலைகளிலும், மௌனம் என்பது அமைதியை மட்டுமே குறிப்பதில்லை. சில வேளைகளில் அது அநீதிக்குத் துணை போவதையே குறிக்கும். இந்தியா, நீதிக்கும் நியாயத்துக்கும் துணை நிற்கும் என்று நம்புகிறோம்.

முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்


Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !



தமிழர் தகவல் முதல் பிரதியில் இப்படி ஒரு அட்டைப்படம் போட நினைத்திருந்தேன். ஆனால் இதன் உண்மையான தத்துவத்தை மக்களுக்கு சொல்ல வேண்டியதால் 44 மாதங்கள் பொறுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தமிழ் ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்து வந்த நாங்கள் எல்லோரும் உண்மையான சைவ மக்கள். விபூதிப் பொலிவுடன் காட்சி யளிப்பவர்கள். ஆறுமுக நாவலரின் சைவ சிந்தனையின் வழிதோன்றல்கள். ஆனால் இன்று புலம்பெயர்ந்திருக்கும் சைவக் கோயில்களைப் பார்க்கும் போது எங்கள் சைவம் கண்ணீர் விட வேண்டிய நிலையில் இருக்கிறது. சைவத்துக்கு முழு முதல் கடவுள் இறைவன், இறைவி. இதை விட வேறு எதுவும் சைவத்துக்கு இல்லை. நாங்கள் **பார்க்காத கடவுளுக்கும் போகாத சொர்க்கத்துக்கும் பலபேர் பிழையான வழியைக் காட்டுகிறார்கள்.** சிவ வழிபாடுதான் எமது சைவ வழிபாடு.

ஆகவே நாங்கள் முழு முதல் கடவுளான சிவனை இலிங்க சொரூபமாகக் காணவேண்டும். அந்த லிங்கத்தில் உள் அடங்கியதே சிவனும் சக்தியும். நாங்கள் இதைவிட எங்கள் வசதிக்காக, மன ஆறுதலுக்காக விஷ்ணு, பிள்ளையார், முருகன், ஐயப்பனை வணங்கி வருகிறோம். இவைகள் சைவத்துக்குரியது அல்ல. நாங்கள் ஆன்மிக ரீதியாக ஒரு கோயிலை அமைக்கும்போது இறைவன் இறைவியை முன்னிலைப்படுத்தி கோயிலை அமைக்க வேண்டும். பிள்ளையாருக்குக் கோயில் அமைத்துவிட்டு அவருக்குப் பின்னால் சிவனை வைத்து வழிபடுவது ஆன்மிகத்துக்குச் செய்யும் பெரிய தவறு. கோயில்கள் இல்லாமல் இருப்பது தவறில்லை. எங்கள் வீட்டிலேயே ஒரு கோயிலை உருவாக்கி வைக்க முடியும். ஒவ்வொரு வீடும் ஒரு கோயில்தான். ஆனால் தவறாகக் கோயில் கட்டி வழிபடுவது பெரிய தெய்வக் குற்றம் என்பதைச் சொல்ல வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம். லண்டனில் உள்ள சகல கோயில்களிலும் மூலவராகச் சிவனை வைத்து வணங்குதல் வேண்டும். சிவனை வைத்து வணங்க விரும்பாத அன்பர்கள் பிள்ளையார் முருகனை வைத்து வணங்கும் போது சிவனை அங்கு வைக்காமல் இருப்பது சாலச்சிறந்தது. குறிப்பாகத் துர்க்கை அம்மன், காளிகாம்பாள், முத்து மாரியம்மன் இவைகள் ஒரு சிறு தெய்வ வழிபாட்டு முறை. இந்த சிறு தெய்வங்களை மூலவராக வைத்து வணங்கும் கோயில்களில் பெருந்தெய்வத்தைத் தவிர்ப்பது சைவத்துக்குச் செய்யும் பெரும் தொண்டு. சிறு தெய்வங்களுக்குக் கோயில் அமைத்துக் கும்பிடுவதில் எந்தத் தவறும் இல்லை. அந்த தெய்வத்தை மட்டும் அந்த கோயில்களில் வைப்பதுதான் சரியான முறை. சிறு தெய்வ வழிபாட்டு முறையை முதன்மைப்படுத்துபவர்களைப் பற்றி **வள்ளலார் இப்படிக் கூறுகிறார் சிற்றதிகாரக் கேடர்கள் என்று**. இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும். இந்த விடயத்தை நாங்கள் என்று திருத்துகிறோமோ அப்போதுதான் சைவத்துக்கு சரியான விமோசனம் கிடைக்கும். சைவத்தில் அதிக அக்கறை உள்ள மக்கள் இதைச் சிந்திப்பார்களாக.


உங்கள் உறவுகளுக்கு உலகின் எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்
ABBY EXCHANGE LIMITED
The Value of your Money
AEL
Money Services
That's Abby Money
928 Garratt lane, Tooting Broadway
London SW17 0ND
Tel : 020 8672 0266 / 8672 7743
Fax : 020 8488 3114
இரண்டாவது கிளை
367, London Road
Croydon, CR0 3PB
Tel : 0208 6897555


விடுமுறையை
கழிக்க
சென்னைக்கு
போறீங்களா ?
வசதியாக
குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை
நடாத்துவதற்கான
ஏற்பாடுகள்
வாகன வசதிகள்
அனைத்துக்கும்
07801227110
தொடர்புகட்கு
M SRI

# வானலையில் யாரோ?

- ரவி

வான் திரைய
புரண்டோடும் ஓர் பெருநதிப் பரப்பில்
சிறு ஓடம் தத்தளிக்கிறது.
தமிழிச்சியின் வயிற்றில்
நான் பிறந்தேனா இல்லையா என
விவாதித்தனர் கனவான்கள்
கொட்டாவி தள்ளிப் பல்லவி பாடினர்
இலகுவானது இதைவிட இலகுவானது
இதையும்விட...
தேடுங்கள் இந்த வழிகளை.
முடியாது
என்னால் முடியாது
இந்த இலக்குள் என் சிந்தனையை நலமடித்துவிட.

ஒரு பெரிய வாய் செய்து - வெளியே
சொற்களைத் தள்ளுகிறார்கள் நம் புத்திஜீவிகள்
உன் சொற்களையும் அதற்குள்ளால் தள்ளிவிடு
அதுவும் இலகு.
முடியாது என்னால் முடியாது
எனது வார்த்தைகள் கனமானவை
அவை எனக்குச் சொந்தமானவை

மழலை வாய்களை
இறுகிப்போன சொற்களை அரைத்துத் துப்பும்
இயந்திரமாய்ச் செய்யும்
குரல்கள் பரவும் காற்றிது
நீயும் சப்பித் துப்பிவிடு
முடியாது என்னால் முடியாது
சொற்களை நான் உற்பத்தி செய்துகொண்டே
இருக்க விரும்புகிறேன் புதிது புதிதாய்.

பட்டினிப் பிசாசு தின்னும்
ஓர் ஆப்பிரிக்கக் குழந்தைக்காய் வழியும்
என் கண்ணீரை
என் இனத்துக் குழந்தைக்காய் மட்டும்
கடன் கேட்கவும்
எனது உணர்ச்சிகளை அழுதுவடிய மட்டும்
உத்தரவிடவும்
இந்தப் பெருவாய்க் காற்றால் முடியுமெனில்
அதையும்தான் நான் வெறுக்கிறேன்.

எனது நாலு வார்த்தைகளை
காவிச் சென்று
விளைநிலத்தில் சேர்த்துவிட முடியா
சோகைக் காற்று
உலகை மஞ்சள் பூசிக் காட்டுகிறது.

நான் தமிழிச்சியின் வயிற்றில் பிறந்தேனா
இல்லையா என்பதை
உன் காமாளைக் கூடத்துள் பரீட்சித்துக்
கொண்டிரு.
நானோ
தமிழ் என்றால் என் உடல் பரவும் உணர்வில்
அதன் எளிமையில்
உறவுகொண்டு கிடக்கிறேன்.



மாதமிரு திருக்குறள் கற்போம்

## இனியவை கூறல்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற ( குறள் : 95 )

பணிவு உடையவனாகவும் இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலன். பிற அணிகலன்கள் அணிகளாகா.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் ( குறள் : 96 )

பிறருக்கு நன்மை பயக்கும் சொற்களை ஆராய்ந்து இனிமையாகச் சொல்லுவானாயின் (அவனுக்கு) பாவங்கள் குறைய அறம் பெருகும்.



தீ. நகர் ராமகிருஷ்ணன் மண்டபத்தில் ஒரு நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. எதேச்சையாக அங்கு சென்றேன். அந்த நிகழ்ச்சி கனடாவில் உள்ள ஆ. முருகதாஸ் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தி லிருந்து கனடாவுக்கு புலம் பெயர்ந்த இவர்

**நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு – கனடா**


என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து பத்தாவது வருடமாக சென்னையில் இந்த விழாவை 15 நாட்கள் நடத்துகிறார். தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் உள்ள பிரபல நாதஸ்வர தவில் வித்வான்களின் கச்சேரியை ஒழுங்கு செய்து நடத்துகிறார். இந்த நிகழ்ச்சிக்கு கனடாவில் உள்ள 40 நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்டியுள்ளதை பத்திரிகையில் பார்த்தேன். மிகவும் சிறந்த பணி. இதை பாராட்டாமல் இருக்க முடியாது.



பதிப்பாசிரியர்


JK Gold House &
Fashion House

314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677



மாபெரும்
கழிவு
விற்பனை



மாதம்
ஒரு ஆன்மிகச்சுற்றுலா

தமிழ்நாடு – 15 நாட்கள்



அறுபடைவீடு, திருவண்ணாமலை
சிதம்பரம், மதுரை மீனாட்சி
கன்னியாகுமரி, திருப்பதி

குளு குளு வசதியுள்ள தங்குமிடங்கள்

சகல செலவு உட்பட
980 பவுண் மட்டும்

தொடர்புகளுக்கு
London
Euro Travels & Tours Ltd
Chennai
ARS Tours

111-B Loampit Vale
Lewisham London SE13
Tel : 0208 465 9666
Fax : 0208 465 9888

உலகின் எந்த பகுதிக்கும்
எங்களிடம் மலிவு விலையில்
விமான டிக்கெட்டுகள் பெற்றுக்கொள்ளலாம்

தமிழில் தொடர்பு கொள்ள
தீ. அருள்தாஸ்

# பாவனையாளர் பக்கம்

மின்சாரம் மிச்சம் கேஸ் மிச்சம் நேரம் மிச்சம்

எதையும் சுலபமாக வேகவைக்க

**Pressure Cooker**

**12 litre**

**£ 35**





ஏகாந்த வீணை

சித்திர வேலைப்பாடுடன்

கூடியது

**£ 450**

சாதாரண வீணை

**£ 250**

**22"** மிருதங்கம்

**£ 95**



வீட்டில் லட்சுமி
கடாட்சம் பெருக பூ உருளி

**£ 30, £ 40**

**£ 50**




சுருதிப் பெட்டி

**£ 35**



பதிவு செய்துதான் பெற்றுக்கொள்ள வேண்டும்

தொடர்புகளுக்கு தமிழர் தகவல்


AMBAAL
JEWELLERS
22 ct Gold & Diamonds
784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323
176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097


VM CASH & CARRY
282, Lee High Road
London
Tel : 020 8852 3561
கலப்படமற்ற தூய தானியவகைகள்,
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்,
பச்சை நிலையில் பொலிவுறும் இலங்கை,
இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்,
கார நறுமண உணவுப் பொருட்கள்,
மதுபான வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்.
உடன்பங்கு
இறைச்சி
கிடைக்கும்


Happy Tex
6 Ealing Road
Wembley
Middx HA0 4TL
Tel : 020 8903 0782
Fax : 020 8903 4680
• Money Transfer
• Textiles
• Watches
• Jewellery
• Rice Cookers
• Perfume
• Wedding Suits


New Mot Station Open !
CAPITAL AUTOS LTD
Accident Repair Centre & General Services & Repairs to all Makes and Models
51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com
BMW MERCEDES VAUXHALL HONDA
VOLKSWAGEN NISSAN Ford
• Fully equipped M.O.T. & accident repair centre
• Insurance repairs welcome
• Recovery Service
• Approved insurance repairs
• Courtesy vehicle available For most repairs
• Professional friendly service and advice
• Collection & deliver within the local area
Hurry - Limited Offer !
இலண்டனில்
எந்த இடத்தில்
இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த
வேலைகளுக்கு
நீங்கள் செல்ல
வேண்டிய இடம்
3 serie coupé
Reg :
Model :
Name :
Tel :
£ 10 OFF Your M.O.T! BASED ON CURRENT M.O.T FEE OF £42.10 - OUR VOUCHER PER CAR ONLY


Goldmaa
Goldmaa
கோல்டுமா
ஒடியல் மா
Odiyal Flour
1Kg
Goldmaa
கோல்டுமா
கோதுமை ஆட்டா
Wheat Flour
1Kg
Goldmaa
கோல்டுமா
குரக்கன் மா
KURAKKAN FLOUR
1Kg
Goldmaa
கோல்டுமா
அவித்த கோதுமை மா
Steamed Wheat Flour
1Kg
மிகவும் மலிவான விலையில்
ஐரோப்பிய தமிழ் மக்களுக்காக
விரைவில்

# யாருக்கு எதுவோ ?



ஓர் ஊரிலே ஒருத்தன் இருந்தான்.

அவனுக்கு என்ன வேலையென்றால் ஓடு மாற்றுகிற வேலை.

ஓட்டு வீடுகளைப் பழுது பார்க்கிற வேலை. உடைந்து போன ஓடுகளை மாற்றிவிட்டுப் புதிய ஓடுகளைப் பொருத்திக் கொடுப்பான். ஓடு மாற்றுவதற்கு அவனுக்கு ஒரு நாள் கூலி 50 ரூபாய். அவன் ஒரு நாள் காட்டு வழியாக அடுத்த ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான் வேலைக்காக.

நடுக்காட்டில் ஒரு ஐயனார் கோயில். அதைக் கடந்து போய்க் கொண்டிருந்தபோது திடீரன்று ஒரு குரல்... !

'' இதோ பாரப்பா... இங்கே வா... ''

இந்த நடுக்காட்டில் நம்மை அழைப்பது யார் ? அவனுக்குப் பயமாக இருந்தது.

ஆகவே நடையைக் கொஞ்சம் வேகப் படுத்தினான். மறுபடியும் கூப்பிட்டது அந்தக் குரல்.

'' உன்னைத்தாம்பா கூப்பிடறேன்... இங்கே வா... ''

எங்கேயிருந்து வருகிறது அந்தக் குரல்? உற்றுப் பார்த்தான். அங்கே இருந்த சாமி சிலைதான் பேசியது.

அதைத் தெரிந்து கொண்டபோது அவன் உடல் நடுங்க ஆரம்பித்தது.

'' ஐயையோ... நான் ஒரு தப்பும் பண்ணலையே என்னை ஏன் கூப்பிடுறே? ''

'' பயப்படாதே... உன்னோட காலடியில கொஞ்சம் தோண்டிப் பார் என்ன இருக்குன்னு தெரியும் ? ''

இவனுக்குத் துணிச்சல் வந்தது. அங்கேயே உட்கார்ந்து தோண்ட ஆரம்பித்தான்.

என்ன ஆச்சரியம்! அங்கே ஒரு பானை தென்பட்டது. வெளியே எடுத்துப் பார்த்தான். உள்ளே நிறைய துவரம் பருப்பு அளவுக்குத் தங்க காசுகள். அவற்றைப் பார்த்ததும் அசந்து போனான்.

இப்போது அந்தச் சிலை மறுபடியும் பேசியது.

'' இதோ பாருப்பா... அவ்வளவையும் ஒரு துணியில கட்டி மூட்டையா எடுத்துக்கிட்டுப் போ... ''

இவனுக்கு தலைகால் புரியவில்லை. உற்சாகம். உடனே மேல் துண்டை எடுத்துத் தரையில் விரித்தான். பானையில் இருந்த அவ்வளவையும் அதில் கொட்டினான். சேர்த்துக் கட்டப்போனான்.

அப்போது அந்தச் சிலை, '' பானையைச் சுத்தமாக காலி பண்ணிடாதே. அதுல ஒரு நாலு தங்கக் காசாவது போட்டு வை '' என்றது.

இவன் பார்த்தான். எண்ணி நாலே காசு மட்டும் எடுத்துப் பானையில் போட்டான். இருந்த இடத்திலேயே பானையை வைத்து மூடிவிட்டு மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு போய் விட்டான்.

அடுத்த ஊரிலே ஓடு மாற்ற வேண்டிய வேலை. ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருக்கிறான். ஆகவே அங்கே போனான். வீட்டு உத்தரத்தில் மூட்டையைக் கட்டித் தொங்கப் போட்டுவிட்டு அவன் கூரை மீது ஏறி உட்கார்ந்து ஓடு மாற்ற ஆரம்பித்தான்.

அந்த வீட்டுக்கார அம்மாள் சமையல் செய்ய ஆரம்பித்தார்கள். துவரம் பருப்பு தீர்ந்து போயிருந்தது. சரி கடையில் போய் வாங்கிக் கொண்டு வரலாம் என்று எண்ணிப் புறப்பட்டபோது உத்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்த துணி மூட்டை கண்ணில் பட்டது.

'' என்னங்க அது மூட்டை? '' என்று கேட்டார்கள்.

கூரைமேலே உட்கார்ந்திருந்த நம்ம ஆள். '' அதுங்களா வேற ஒண்ணுமில்லீங்க... துவரம் பருப்பு வாங்கிவச்சிருந்தேன்... வீட்டுக்காக '' என்றான். வீட்டுக்கார அம்மாள் ஒரு கணம் யோசித்தார்கள்.

'' சரி... அவசரத்துக்கு இதிலேயிருந்து கொஞ்சம் எடுத்துக்குவோம். அப்புறம் வாங்கிக் கொடுத்துவிடலாம். ''

இப்படி நினைத்தபடியே மெதுவாக மூட்டையைக் கீழே இறக்கிப் பார்த்தால். அவ்வளவும் தங்க வில்லைகள்.

அவ்வளவுதான் பளிச்சென்று உள்ளுக்குள் ஒரு யோசனை.

**தென்கச்சி சுவாமிநாதன்**

இருந்த அவ்வளவு தங்கக் காசையும் தன் வீட்டிலே உள்ள ஒரு பானையிலே கொட்டிக் கொண்டுவிட்டார்கள். பின்னர் கடையிலே துவரம் பருப்பு வாங்கி வந்து அந்தத் துணி மூட்டையில் போட்டுக் கட்டி பழையபடியே உத்தரத்தில் தொங்கவிட்டு உள்ளே போய்விட்டார்கள்.

மாலையில் வேலை முடிந்ததும் அவன் கீழே இறங்கி வந்தான். துணி மூட்டையை கீழே இறக்கினான். இறக்கும்போதே கொஞ்சம் சந்தேகம்.

' என்ன இது... காலையிலே கனமாக இருந்தது. இப்ப இவ்வளவு லேசா இருக்கே... ! '

பிரித்துப் பார்க்கிறான். உள்ளே துவரம் பருப்பு !

வீட்டுக்கார அம்மாவிடம் கேட்டான்.

'' இதுல தங்கம் இருந்ததே பார்த்தீங்களா ? ''

'' என்ன ... கனவு கினவு கண்டியா ? '' என்றார்கள் அந்த அம்மாள்.

அவனால் ஒன்றும் பதில் பேச முடியவில்லை. மூட்டையைத் தலையிலே தூக்கி வைத்துக் கொண்டு புறப்பட்டான். போகிற வழியிலே அந்த சாமி சிலை.

'' இப்படி ஆசை காட்டி மோசம் பண்ணிட்டியே... '' என்று புலம்பினான்.

சிலை பேசியது.

'' இதோ பாருப்பா... நான் ஒண்ணும் மோசம் பண்ணலே... இன்றைக்கு அந்தத் தங்கம் அந்த அம்மாவுக்குப் போய் சேரணுங்கறது விதி. அதைத் தூக்கிட்டுப் போறதுக்கு ஆள் கிடைக்கல்லே. அதுதான் உன் தலையில் ஏத்தி அனுப்பி வச்சேன். அவ்வளவுதான். கவலைப்படாதே. உனக்குக் கிடைக்க வேண்டியது அந்தப் பானையிலே இருக்கு. அதைப் போய் எடுத்துக்கிட்டு நீ போய்ச் சேர். ''

அவன் வேகமாக ஓடிப் போய் அந்தப் பானையைத் தூக்கினான். பானையிலே அவன் காலையில் போட்டுவிட்டுப் போன அதே நான்கு தங்கக் காசுகள்தான் இருந்தன. இவன் தன்னையே நொந்து கொண்டான் : ' தரித்திர புத்தி நமக்கு. அப்பவே கொஞ்சம் நிறைய அள்ளி அதுல போட்டிருக்கக் கூடாதா? ' என்று.

யாருக்கு எது கிடைக்க வேண்டுமோ அதுதான் கிடைக்கும் என்பதை விளக்குவதற்காகச் சொல்லப்படுகிற கதை இது.

இளைஞர்களே... இந்தக் கதையையே கொஞ்சம் வேறு விதமாக யோசித்துப் பாருங்கள். நமக்கு வேண்டியதை நாம்தான் நிர்ணயம் செய்து கொள்கிறோம் என்கிற கருத்தும் அதனுள்ளே அடங்கியிருக்கிறது அல்லவா?

இந்தக் கதையை கேட்டுவிட்டு நம்ம ஆள் ஒருத்தன் சொன்னான்.

'' நான் கூட ஒரு நாள் ஒரு பாதை வழியாகப் போய் கொண்டிருக்கும் போது ஒரு சூட்கேஸ் கிடைச்சுது. திறந்து பார்த்தேன். நிறையப் பணம் இருந்தது. இருந்தாலும் எனக்குக் கிடைக்க வேண்டியது கிடைச்சுது '' என்றான்.

'' எவ்வளவு ? '' என்று கேட்டேன்

அவன் சொன்னான் :

'' ஆறு மாசம் கடுங்காவல் தண்டனை ! ''

## நம்பிக்கை மூலை

மன அழுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஒரு பெண் உபதேசம் செய்யும் ஒருவரிடம் அழைத்துச்செல்லப் பட்டாள். அவர் அடுக்கடுக்காய் அறிவுரைகள் சொல்ல, அவள் கல்போல அமர்ந்திருந்தால். பிறகு ஒரு துறவியிடம் அழைத்துச்செல்லப்பட்டாள். துறவிக்கு அன்று மௌன விரதம். கருணையோடு அந்தப் பெண்ணைப் பார்த்து தன் மனதில் உள்ளதை பேசுமாறு சைகை செய்தார். பரிவோடும் அக்கறையோடும் அவள் சொல்வதைக் கேட்டார். அரை மணி நேரம் ஆயிற்று. துறவி ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. ஆனால் அந்தப் பெண் பூரண குணமடைந்தாள். பிறர் துன்பங்களை தீர்ப்பதற்கு நாம் பேச வேண்டியதில்லை. அவர்களைப் பேச அனுமதித்தாலே போதும்.

## இலக்கிய ஆர்வலர்களுக்கு

தமிழ் நாட்டின் தலைசிறந்த பேச்சாளர் தமிழறிஞர் தமிழ் அருவி மணியன் அவர்கள் மே மாதம் இலண்டனுக்கு வருகை தர இருக்கிறார்கள். அவர் இரண்டு நாள் இலக்கியச் சொற்பொழிவாற்ற இருக்கிறார்கள். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தமிழர் தகவல்

நம்பிக்கை மூலையில் இடம்பெற்றுள்ள அனைத்து செய்திகளும் **நமது நம்பிக்கை** இதழிலிருந்து எடுக்கப்பட்டது. நன்றி

பிறரின் குறைகளைக் காண்பது எளிது ;
நமது குறைகளை உணர்வது அரிது - புத்தர்



அங்குசம் இலவசமாகக் கிடைக்கும் என்றால், நம் மக்கள் யானையைக்கூட வாங்கிச் செல்வார்கள் என்று கவிஞர் கண்ணதாசன் ஒருமுறை எழுதினார். யானையை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஆனால் இலவசம் என்ற ஓர் அறிவிப்பு, அதை சிந்திக்கும் திறனைக்கூட தடுத்துவிடுகிறதாம்!

இலவசம் என்ற அறிவிப்பைக் கேட்டால், நாம் ஓடும் ஓட்டம் அப்படித்தானிருக்கிறது. ஏதாவது ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம் என்ற அறிவிப்பே நமக்கு செய்யப்படும் மறைமுக மூளைச் சலவையில்லையா ? வியாபாரம் வேறு தர்மம் வேறு, தர்மத்தில் இலவசம் இருக்கலாம். வியாபாரத்தில் இலவசமாகக் கிடைக்கிறதென்றால், அதன் பின்னணி என்னவாக இருக்கும் ? இரண்டின் விலையையும் ஒன்றுடன் சேர்த்து விற்பார்கள் அல்லது விற்காத சரக்கையும் சேர்த்துத் தள்ளுவார்கள். அல்லது வியாபாரத்தைத் தூக்கி நிறுத்த லாபத்தைக் குறைத்து இலவசம் தருவார்கள். இருப்புச் சரக்கை விற்றுத் தீர்க்க விலையைக் குறைத்துத் தருவது வியாபார தந்திரம்தான். ஆனால், தள்ளுபடிக்கும் இலவசத்துக்கும் அலைமோதும் நமது மன நிலைதான் ஆய்வுக்குரியது.

எனக்கு சும்மா கிடைக்க வேண்டும் என்ற நம் எதிர்பார்ப்பின் வெளிப்பாடுதான் இலவசத்தில் ஆர்வமாக இருப்பது. குழந்தைப் பருவத்திலிருந்தே நாம் இதற்குப் பழக்கப்பட்டு விடுகிறோம். இதைச் செய்தால் இது தருகிறேன் என்று குழந்தையைப் பழக்கப்படுத்தி விடுகிறோம். குழந்தையும் வளர வளர, நான் இதைச் செய்தால் இதைத் தருவாயா ? என்று கேட்க ஆரம்பிக்கிறது. இப்படி கேட்கும் பழக்கம் மிகவும் தவறானது. இதை விட்டுவிடு என்று மகனைக் கண்டித்தார் ஒரு தந்தை. கொஞ்ச நேரம் சிந்தித்த சிறுவன் சொன்னான், ஓகே! இப்படி கேட்பதை நான் விட்டு விடுகிறேன். அப்படி விட்டுவிட்டால், எனக்கு என்ன தருவீர்கள் ? – ஒரு கோணத்தில் பார்த்தால் இதுகூட லஞ்சம்தான். லஞ்சத்தை நாம் எல்லோரும் சகித்துக் கொள்வதன் காரணமே இப்படி ஏதோ ஒருவகையில் நாம் எல்லோருமே கொடுப்பவர்களாகவோ அல்லது வாங்குபவர்களாகவோ இருப்பதுதான் என்றே எண்ணத் தோன்றுகிறது. லஞ்சம் வாங்கியதற்காகக் கைதாகி, மீண்டும் வீட்டுக்குத் திரும்பிய ஒருவர் இப்படிச் சொன்னார். வாங்கினேன் பிடித்து விட்டார்கள். கொடுத்தேன் விட்டுவிட்டார்கள் !

இந்த இலவச அரிப்பு நம் மனத்தை அரிக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. நமது நடுநிலையான சிந்தனைகள் மாறாமலிருக்க இது உதவும். இல்லாவிட்டால், வளர்ந்த நிலையிலும், பெரும் பொறுப்புக்களை ஏற்ற நிலையிலும், இந்த அரிப்பு போகாது. இலவச பாஸ் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். அதிகார நிலையில் உள்ளவர் களுக்காகவே உருவாக்கப்பட்ட சொல் இது. ஐயா கேட்கச் சொன்னார் என்று சொல்லி இலவசத்தை அனுபவிக்க அடுத்த நிலை ஆட்களும் தயாராக இருப்பார்கள். ஐயாவுக்கு இரண்டு பாஸ் என்றால், ஐயா பேரைச் சொல்லி இருபது இலவசம் போகும்.

மந்திரியுடன் ராஜா வேட்டைக்குப் போனார். நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டது.

என்ன இது ? என்று கேட்டார் ராஜா.

குளிருக்கு இலவசமாக போர்வை கிடைக்குமா என்று கேட்கின்றன மன்னா என்றார் மந்திரி.

கஜானாவில் பணம் எடுத்து எல்லா நரிகளுக்கும் இலவசமாகப் போர்வை கொடுக்கச் சொன்னார் ராஜா. சில நாட்கள் கழித்து மீண்டும் வேட்டைக்குப் போன போது நரிகளின் ஊளைச் சத்தம் கேட்டது.

இது என்ன ? என்று சற்று எரிச்சலுடன் கேட்டார் மன்னர்.

கோபப்பட வேண்டாம் மன்னா ! நீங்கள் இலவசமாகப் போர்வை தந்ததற்கு நன்றி சொல்கின்றன என்றார் மந்திரி. இலவசம் எங்கே போனது தெரிகிறதல்லவா ?

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷரஃபைப் பாராட்டி பத்திரிக்கை ஒன்றில் ஒரு செய்தி வந்திருந்தது. ராவல்பிண்டியில் நடந்த இந்தியா பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் போட்டியைப்



பார்க்க வந்திருந்தார் அல்லவா ? அப்போது அவரது குடும்பத்தினர் இருவர் உடன் வந்திருந்தனர். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அவருக்கு அதிபர் என்ற முறையில் அழைப்பு விடுத்திருந்தது. எனவே, இலவச பாஸ் தந்து அவரும் அவரைச் சார்ந்தவர்களும் போட்டியைக் காண்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் வற்புறுத்தி 4500 ரூபாய் கொடுத்து மூன்று பேருக்கும் நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டுதான் உள்ளே நுழைந்தார் அதிபர் பர்வேஸ் முஷரஃப். மற்றவை இருக்கட்டும். இதற்காகவாவது கண்டிப்பாக அவரை நாம் பாராட்டத் தோன்றுகிறது இல்லையா ?

சும்மா இருப்பதுதான் சுகம் என்று நினைப்பவர்கள் சோம்பேறிகள் என்றால், சும்மா கிடைப்பதுதான் சுகம் என நினைப்பவர்களை என்னவென்று சொல்லலாம் ? கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், அப்பா சம்பாதித்த சொத்திற்காக அடித்துக் கொள்ளும் பிள்ளைகளைக் கூட அப்படித்தான் எண்ணத் தேன்றுகிறது. தந்தையின் மரணத்திற்குப் பிறகு, அவர் சம்பாதித்த சொத்து பிள்ளைக்குத்தான் என்று சட்டம் சொல்லத்தான் செய்கிறது. ஆனால், தந்தையோ அல்லது முன்னோர்களோ சேர்த்த சொத்தினை அதை சம்பாதிக்க, நமது சுண்டு விரலைக் கூட அசைக்காத நிலையிலும், தனக்குத் தான் வேண்டும் என்று சண்டையிட்டுக் கொள்ளும் மனோபாவத்தை என்னவென்று சொல்வது ?

தந்தையின் முழுச் சொத்தையும் தட்டிப் பறிக்க நினைத்த அண்ணனைப் பற்றி ஒரு கிராமியக் கதை.

ஒரு தென்னை மரம், ஒரு போர்வை, ஒரு பசு இவை மூன்றையும் சொத்தாக விட்டுவிட்டு இறந்தார் தந்தை. இரண்டு மகன்களுக்கும் அதை எப்படிப்பிரிப்பது என்று பிரச்சனை வந்தது.

அண்ணன், தென்னை மரத்தின் மேல்பகுதி எனக்கு, கீழ்பகுதி தம்பிக்கு. பசுமாட்டின் பின்பகுதி எனக்கு, முன்பகுதி தம்பிக்கு. போர்வை பகலில் தம்பிக்கு, இரவில் எனக்கு என்று பாகம் பிரித்தான். தம்பியும் ஒப்புக்கொண்டான். ஆனால், அதன் பின்னர்தான் பிரச்சனையே தொடங்கியது.

தென்னை மரத்துக்குத் தம்பி தண்ணீர் ஊற்றுவான். அண்ணன் இளநீரைப் பறித்துக் கொள்வான். தம்பி பசுவிற்கு உணவு தருவான் அண்ணன் பால் கறந்து கொள்வான். தம்பி போர்வையைத் துவைத்துக் காய வைப்பான். அண்ணன் இரவில் அதைப் போர்த்திக் கொள்வான்.

கொஞ்ச நாட்களில் தம்பிக்கு அண்ணனின் தந்திரம் விளங்கிவிட்டது. அவன் மாற்றுத் தந்திரம் செய்தான். மரத்திற்கு தண்ணீர் ஊற்றுவதையும், உரம் போடுவதையும் நிறுத்தினான். மரம் காய்ப்பதை நிறுத்தி காயத் தொடங்கியது. அண்ணன் தட்டிக் கேட்டபோது, கீழ்பாகம் என்னுடையது. நீ யார் அதை கேட்க ? என்றான்.

பசுவிற்கு உணவு தருவதை நிறுத்தினான். பால் வற்றியது. பால் கறக்க அண்ணன் அமர்ந்த போது பசுவின் மூக்கில் புகை வைத்தான். பசு அண்ணனை ஓங்கி ஓர் உதை விட்டது. அண்ணன் குறை சொன்னபோது, பசுவின் முன் பாகம் என்னுடையது நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்றான்.

பகலில் போர்வையை விரித்துப் பயன்படுத்தி விட்டு, இருள் சூழும் நேரத்தில் தண்ணீரில் நனைத்து வைத்தான். அண்ணனால் இரவில் அதைப் பயன்படுத்த முடியவில்லை! வேறுவழியின்றி அண்ணன் தம்பியுடன் சமாதானமாகப் போவதென முடிவுக்கு வந்தான்.

சும்மா கிடைப்பது தேவையில்லை என்பதில் உறுதி நமக்கு வருவது நல்லது. இல்லாவிட்டால் நமக்குத் தரவேண்டும் என்கிற அற்பமான எண்ணத்தையும், தராதவர்கள் மீது வெறுப்புணர்ச்சி யையும் அது தோற்றுவிக்கும்.

கணவன் மனைவிக்கு ஜீவனாம்சம் தரவேண்டிய வழக்கு ஒன்று நடந்துகொண்டிருந்தது. வாதப் பிரதிவாதம் முடிந்ததும், நீண்ட யோசனைக்குப் பின் நீதிபதி கணவனிடம் சொன்னார்,

சரி ! உன் மனைவிக்கு மாதம் 3000 ரூபாய் ஜீவனாம்சம் தரலாம் என்றிருக்கிறேன்.

உடனே கணவன், ரொம்ப நன்றிங்க ஐயா! நானும் என் பங்குக்கு மாதம் ஐந்தோ பத்தோ கண்டிப்பாகத் தருவேங்க ! என்றான்.

நம் உழைப்புத்தான் நம்மைக் காப்பாற்றும். முடிந்தால், தேவையிலிருக்கும் சிலருக்கு நாம் உதவலாம். முடியாத நிலையில் உதவவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. ஆனால், நம்முடைய உழைப்பிற்குத் தொடர்பில்லாத ஒன்று நமக்குக் கிடைக்க வேண்டும் என்று எண்ணும் மனது கீழ்த்தரமானது. ஆரோக்கியமில்லாதது.

சிகரங்கள் நமக்காக
வழக்கறிஞர் த. இராமலிங்கம்
விகடன் பிரசுரம்

## இணுவில் கோண்டாவில்

# விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் திருக்கோயில்

(காரைக்கால் சிவன்கோயில்)

திருத்தல வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படும் சிவத்தலங்களில் காரைக்கால் சிவன் ஆலயம் சிறப்பானது. தொன்மையானது. பல அற்புதங்களை வெளிப்படுத்தியது. இதனால் இத்தலம் பலராலும் போற்றிப் புகழப்பட்டு வருகிறது.

முதலாம் குலோத்துங்கனின் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் இலங்கை வந்தபோது காரைக்கால் பகுதியிலும் தங்கியிருந்தான் என இராசநாயக முதலியாரின் யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூல் தெரிவிக்கின்றது. யாழ்ப்பாணக் குடியேற்றம் என்னும் தமது நூலில் முத்துக் குமாரசாமிப்பிள்ளையும் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இத்திருத்தலம் யாழ் மாவட்டம் யாழ் - காங்கேசன்துறை நெடுஞ்சலையில் வடபால் நாலாவது கல் தொலைவில் அமைந்துள்ள இணுவில் கோயில் வாசல் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் பாதையின் அரைக்கல் தூரத்தில் அமைந்துள்ளது. இணுவில் கிராமத்தின் தென் கிழக்கு முனையிலும், கோண்டாவில் கிராமத்தின் வடமேல் திசையிலும், உரும்பிராய் கிராமத்தின் தென்மேல் திசையில் 200 மீற்றர் தூரத்தில் விவசாயப் பெருநிலப்பரப்பின் நடுவே பெருஞ் சோலையாகக் காட்சியளிக்கிறது.

பண்டைக் காலத்தில் சோழ மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்ட காரைக்கால் தலம் விசுவநாதப் பெருமானையும், விசாலாட்சியம்பாளையும் மூலவர்களாக கொண்டதோடு, காசியில் விசுவநாதப் பெருமான் திருத்தலத்தின் அருகில் சுடுகாடு இருப்பது போல இங்கும் தென்கீழ் பகுதியில் சுடுகாடும் அமைந்துள்ளது. காசியில் அன்னப்பூரணியால் அன்னதானம் வழங்கப்படுவது போல அறங் காவலர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் அன்ன தானம் வெகுசிறப்பாக நடைபெறுகிறது. இப்பகுதியில் நாட்டு நிலைமைக்கேற்ப மக்களின் இயன்ற பங்களிப்பின் சிறப்புடன் எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றன.

பண்டைக்காலத்தில் சோழ மன்னர்களால் வணங்கப் பட்ட இத்திருத்தலம் காலப் போக்கில் ஆட்சிமாற்றம், காலநிலை மாற்றம், இந்த அயலில் குடிசன இடப்பெயர்வுகள் போன்ற காரணங்களால் இவ் ஆலயம் பராமரிப்பற்ற நிலையில் சிதைவுற்றது. நாளடைவில் மரங்கள், செடிகள், கொடிகள் மூடிப் படரவும், குப்பைகள் தேங்கவும் கொடிய விஷப்பாம்புகள் குடியேறியும் புற்றுக்கள் நிறைந்து காணப்பட்டதாம்.

1860ஆம் ஆண்டளவில் இணுவில் கிழக்கில் விவசாயக் குடியில் சுப்பிரமணியம் என்பவர் தாம் செய்த முற்றத்தவத்தாலும் இணுவில் கிராமத்தின் ஆன்மீக விடிவுக்காகவும் தோன்றினார். இவரது பெற்றோர் பெருநிலப்பரப்பில் விவசாயம் செய்தனர். மேலும் அநேக கால்நடைகளையும் வளர்த்து வந்தனர். சுப்பிரமணியம் கல்வியில் நாட்டமில்லாமல், தமது குடும்ப சொத்தான கால்நடைகளை இப்பகுதியில் மேய்க்கும் பொறுப்பை ஏற்றுக் காரைக்கால் பகுதியை மையமாகக் கொண்டார். இவரது தாயார் இவருக்கு மதிய உணவு கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். ஒரு நாள் தாயாரின் உணவு வரப் பிந்தியதால் பசியும் அசதியும் காரணமாக காரைக்கால் மாரியம்மன் அமைவிடத்தின் அமைதியில் மரநிழலில் உறங்கிவிட்டார். முற்பிறவிப் பயனாக இவருக்கு ஞான சித்தியளிக்க இருந்த அன்னை மாரியம்மன் சுப்பிரமணியத்தின் தாயுருவில் கட்டுச் சோற்றினை இவருக்கு வழங்கினார். அன்னை வழங்கிய திருவமுதுண்ட சுப்பிரமணியம் சித்தரானார். நேரம்பிந்தி வந்த தாயார் மகனுக்கான உணவைக் கொண்டுவந்தபோதுதான் புதுமைகளும் விளக்கங்களும் அறிந்து உண்ட திருவமுது செயற் படவும் பரவசமடைந்து ஊரார் அறிய மிகப் பெரிய ஞானியானார். இளம்பிராயத்தில் ஞானசித்தி யடைந்தவர் தன்னை இறைபணிக்கே அர்ப்பணித்தார்.

துறவியாய் சந்நியாசம் பூண்ட இவரை யாவரும் சந்நியாசியார் என அழைத்தனர். நாட்டின் பல திசையிலிருந்தும் மக்கள் இவரிடம் வந்து நாட்டம் கொண்டனர். இறைவனின் சிந்தனையில் மணி மந்திரம் ஓதி திருநீறிட்டு தீராத பிணிகளையும் இவ்வாலயத்திலிருந்து மேற்கொண்டார். இவரது சித்த

மகிமை, மூலிகைகள் உதவியுடன் நோய்கள் மாற்றவும், உளப்பிணி அகற்றவும், பில்லி சூனியம் அகற்றவும் தலைப்பட்டார். இவர் இத்தல இறைவனை உறுதுணையாகக் கொண்டு சகல பணிகளையும் மேற்கொண்டார். உதவி நாடிவந்தவர்கள் அனைவரும் இவரது உதவியாளராகச் செயல்பட்டனர்.

அடியார்களின் துணையுடன் தமது பணிக்கு ஆசிவழங்கும் வைரவருக்கும், தம்மைச் சித்தராக்க அமுது தந்த மாரியம்மனுக்கும் சந்நிதிகளமைத்தார். மூலமூர்த்தியான சிவனுக்கும் சந்நிதியமைக்கும் நோக்கில்அயலில் துப்புரவுப் பணிகளை ஆரம்பித்தார். அடியார்கள் சந்நியாசியாரின் வேண்டுதலின் பேரில் சிரமதானப்பணி தொடங்கச் சென்றபோது சிவலிங்கத்தின் அண்மையில் சூழ்ந்திருந்து காவல் பணியாற்றிய விஷப்பாம்புகள் வேலை செய்ய விடாது துரத்தின. அடியார்கள் நிலைகண்ட பெரியார் இறைவனை வேண்டினார். மேலும் ஆலயம் செப்பனிட்டு பக்தர்கள் வணங்க வசதிசெய்யும் நோக்கில் தாம் முன்வந்ததை வெளியிட்டார். சிவலிங்கத்தைச் சூழ்ந்திருந்த பாம்புகள் கூட்டம் இருவாரங்கட்குள் அவ்விடத்தைவிட்டு அகன்றன. பின்னர் ஆலய வேலைப்பாடுகள் தொடர்ந்து நடைபெற்றன. இதே காலத்தில் இறைவனின் நாட்டமும் நாட்டு மக்களின் நற்பேறும் கைகூட ஆரம்பித்தன. பெரியார் பொதுமக்களின் உடற்பிணிக்கேற்ற மூலிகை மரங்கள், பழ மரங்கள், நிழல் மரங்கள், ஆல், அரசு, வேம்பு, மகிழ் போன்ற தெய்வீக மரங்களும் உட்பட திருத்தல வளாகத்திலும் (சுடுகாடு உட்பட) நாற்புறமும் 1008 பயன்தரு மரங்களை நட்டுப் பராமரித்தார். இந்த மரங்களுக்கு நீரூற்றவும், பொது மக்களும் மற்றும் உயிரினங்களும் தாகம் தீர்க்கவும் ஆலயச் சூழலில் வற்றாத ஏழு திருக்குளங்கள் (தீர்த்தக் கிணறுகள் உட்பட) தோண்டப்பட்டன. குறுகிய காலத்தில் இறைவன் திருவறுளால் காரைக்கால் பகுதி பயன்தரு சோலைவனமாகக் காட்சி தந்தது.

சந்நியாசியாரின் காலத்தில் இறைவனின் சித்தமும் திருவருளும் கைகூட இப்பகுதி அமைதியும், பரிசுத்தமும், தெய்வீக அருள்வீசும் புனித பூமியானது. ஆன்மீக நாட்டமுள்ளவர்களான நயினாதீவு முத்துச்சுவாமியார், தவத்திரு வடிவேற்சுவாமியார், ஞானபண்டிதரும் வைத்திய கலாநிதியுமான நடராசப்பிள்ளை, யோகர்சுவாமிகள், குடைச்சுவாமிகள் என்றழைக்கப்பட்ட கந்தையாச் சுவாமிகள் போன்ற பல ஞானிகள் இங்குவந்து திருவருள் நாட்டம் கொண்டு ஆன்மீக ஆய்வுகளை நடாத்தினர். இத்திருத்தல அபிவிருத்தியும், பூசை வழிபாடுகளும் தொடங்கினர். இவர்கள் பகலில் ஞானப்போக்கில் ஆய்வுகளும் அபிவிருத்திப் பணிகளும், மரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடுவதும், பொழுதுபோக்காக '' கூழ் காய்ச்சி உண்டும் '' மகிழ்ந்தனர். இக்கூழ் உணவு இத்திருத் தலத்தில் சமூகமளிக்கும் யாவருக்கும் அன்னதானப் பணியாக வழங்கி ஆரம்பித்து இன்றுவரை பிரபல்யம் அடைந்துள்ளது.

சந்நியாசியார் தமது ஞானநிலையில் இணுவில் கந்தசுவாமி கோயிலிலும் தம்பணியை நிலை நிறுத்தினார். இவரது கனவில் தோன்றிய இணுவைக் கந்தன் தனக்கென ஒரு மஞ்சம் அமைக்குமாறு அன்புக்கட்டளையிட்டார். இந்த மஞ்சம் இவரது குடியிருப்பின் அயலிலுள்ள மஞ்சத்தடியிலிருந்தே செய்யப்பட்டது. இந்த மஞ்சம் கந்தசுவாமி கோயிலுக்கு இழுத்துச் செல்வதன் பேரில் மஞ்சத்தடியிலிருந்து கந்தசுவாமி கோயில் வரை 32 முழு அகலங்கொண்ட பெருவீதி அமைக்கப்பட்டது. இந்த மஞ்சம் நூறு வருடங்களாக இன்றும் உலகப் பிரசித்திப் பெற்ற பெரிய மஞ்சமாக உலாவருகிறது. இணுவில் கந்தசுவாமி கோயில் ஆண்டு உற்சவத்தில் முருகன் புதிதாக அமைக்கப்பட்ட மஞ்சப்பாதை மூலம் ஏழுதேரில் காரைக்கால் பகுதிக்குச் சென்று தீர்த்தமாடி வந்தமை குறிப்பிடத்தக்கது. இணுவில் கந்தன் கோயில் சூரன்போர் காரைக்கால் திருப்பதியின் தென்புறத்தே 100 யார் தொலைவிலிருந்து பெருவெளியில் நடை பெற்றதாகவும் செவிவழிச் செய்திகள் செப்புகின்றன.

சந்தியாசியாரின் இன்னோரன்ன குறிப்பான தெய்வீகமான பணிகளால் காரைக்கால் திருப்பதி மேலும் சிறப்பும், ஆன்மீக மகிமைகளும் அமையப் பெற்றன. சந்நியாசியார் 1917ஆம் ஆண்டு முக்தியடைந்தார். சிறிது காலம் ஆலய அபிவிருத்தி செயலிழந்தது.

சந்நியாசியாரின் மரபில் அவதரித்தவர் அம்பலவாணர். சந்நியாசியார் போல விவசாயத்திலும் கால்நடைப் பராமரிப்பிலும் நாட்டங்கொண்டு ஏட்டுக்கல்வியை நாடாது காரைக்கால் பகுதியில் தமது ஆநிரைகளை மேய்த்து வந்தார். இறைவனின் பக்தனான கொக்குவில் வைத்திய கலாநிதி நடராசப்பிள்ளையின் கனவில் தோன்றிய விசுவநாதப் பெருமான் தனது ஆலயத்தை பராமரிக்ககூடிய அம்பலவாணரை அடையாளம் காட்டினாராம். இறைவனது வழிகாட்டலின் பேரில் தமது நண்பர் இ. செல்லப்பா மூலம் மாடு மேய்த்துத் திரிந்த அம்பலவாணரை நடராசப் பிள்ளை பொறுப்பேற்றார். நடராசப்பிள்ளையினால் குருகுல முறைப்படி

ஆயுள்வேத வைத்தியம், மணிமந்திரம், மாந்திரீகம், விஷகடி வைத்தியம், மனநோய்ப் பிணியகற்றல், ஆலய நிர்வாக முறை யாவும் கற்ற அம்பலவாணர் சந்நியாசியார் விட்ட பணியை ஒரு சுபவேளையில் விசுவநாதப்பெருமானை உள்ளத் திருத்தி உலக நன்மைக்காகச் செயற்பட தொடங்கினார். இவருக்கு உறுதுணையாக கோண்டாவில் இ.செல்லப்பா, சித்தர் செல்லர் போன்றோர் செயற்பட்டனர். ஆலயம் சிறப்படைந்தது.

அம்பலவாணர் சந்நியாசியாரின் உருவமான சடையும் குறுந்தாடியும் கூடிய தெய்வீகப் பொலிவுடன் பெரியாரைப் போல காரைக்காலிலுள்ள வைரவர் மீது தணியாத பேரன்பு பூண்டு தியானத்திலிருத்தி மணிமந்திரம் சொல்லிச் திருநீறிட்டு தம்மை நாடிவந்த எண்ணற்றவர்களின் உடல், உளப்பிணி அகற்றல் போன்ற நற்சேவையை ஆன்மீகச் சிந்தனையுடன் வழங்கினார். பெரியாரின் கைவண்ணத்திலான திருக்குளங்கள், நீர்நிலைகள், 1008 மரங்கள் ஆகியவற்றைப் பயபக்தியுடன் பேணிவந்தார். இவரது காலத்தில் ஆலயத்தில் புதிய பல சிறப்பான கட்டுமாணப் பணிகள் நிறைவேறின. மேலும் அன்னதானப் பணியையும் மாதந்தோறும் தவறாது பேணிவந்தார். இக்கோயிலின் கொடியேற்ற வைபவத்துடன் 12 திருவிழாக்களும் பெருவிழாக்களாக அமைந்தன. நெடுங்காலமாக நித்தியபூசை (மூன்றுவேளை)களை வீரசைவப் பூசகர்கள் பக்தி சிரத்தையுடன் சிறப்பாக நடத்தினர்.

அம்பலவாணர் (காரைக்கால் சாமியார்) 1979இல் சமாதியான பின் வைத்தியம் தவிர கோயில் நிர்வாகமும் அபிவிருத்தியும் அவரது குடும்பத்தவர்களால் பக்தர்களின் உதவியுடன் அவ்வப்போது நடாத்தப்பட்டு வருகிறது. வீதியுளா வரும் விசுவநாதப் பெருமான், விசாலாட்சியம்பாள் உருவகங்கள் மூன்றடி உயரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இதர மர ஊர்திகள் (வாகனங்கள்), பெரிய சித்தரத்தேர் யாவும் அண்மையில் எம்பெருமானுக்குக் கிடைத்த அன்பளிப்புகளாகும்.

மூலவராகக் கருவறையில் ஆறடி உயரமும் ஏறக்குறைய 10 அடி சுற்றளவும் நான்கு திசைகளிலும் உருவத்தோற்றங்களும் ஒரே பெரிய கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டதான லிங்கத் திருவுருவம் காணப்படுகிறது. இந்தியாவில் ஓரிரு இடத்தில் மட்டும் இவ்வமைப்பான பஞ்சலிங்கமூர்த்தமும் உண்டு. இலங்கையில் இங்கு மட்டுமே அமைந்துள்ளது. இந்த பஞ்சலிங்கம் 1939, 1940 ஆம் ஆண்டளவில் மருதனார்மட இராமநாதேஸ்வரர் கோயில் வடிவமைக்க வந்த சிற்பிகளால் முன்பக்கம் புலித்தோலில் சிவபிரான் அமர்ந்து தவஞ்செய்யும் கோலத்தில் அழகாக மெருகூட்டப்பட்டது. ஆனால் மிகவும் தொன்மை வாய்ந்ததும் அற்புதமானதுமான இந்த லிங்கரூபம் யாரால் எப்போது இங்கு வடிவமைக்கபட்டதென்று கூற முடியாதிருக்கிறது.

இச்சிவலிங்கத் தோற்றம் அமைந்த கருவறையில் நாற்திசையும் வெளியிலிருந்து பார்க்கக் கூடியவாறு வாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திருத்தலம் மேற்குவாசல் நோக்கி அமைந்துள்ளது. வாசலில் அரசும் வேம்பும் இணைந்து அமைந்துள்ளன. இம்மரத்தடியில் சிவலிங்க வழிபாடும் நடைமுறையில் இருக்கிறது. கொடித் தம்பத்தின் வடபால் உள்வீதியில் நவக்கிரக மண்டபமும், மேற்கே யாகமண்டபமும், விநாயகர் முருகன் சந்நிதிகளும் அமைந்துள்ளன. அர்த்தமண்டபத்தில் தெற்கு நோக்கிய விசாலாட்சி அம்பாளும் உள்வீதியில் காட்சியிளிக்கிறார். வெளியே வடபால் சந்தியாசியாருக்கு அமுதமளித்த மாரியம்பாளும், கிழக்கே நாகதம்பிரானும் (வெகு நாட்களுக்கு முன் கட்டிய நாகதம்பிரான் சந்நிதியில் ஏழு அடி உயரத்துக்கு மேற்பட்ட உயரமுடைய பாம்பின் புற்றுச் சந்நிதியை முழுதாக நிரப்பியிருப்பதால் இது புதிதாக அமைக்கப்பட்டது) இதன் தெற்கே பெரியாருக்கும், அம்பலவாணர் சுவாமியாருக்கும் ஞானம்கொடுத்த வைரவரும் அமைந்துள்ளனர். தெற்குவீதியில் 60அடி நீளமான அன்னதானமடம் அமைந்திருக்கிறது. வன்செயலினால் இம்மடமும், பழைய மடைப்பள்ளியும் சேத மடைந்துள்ளன. அம்பலவாணர் சுவாமியாரின் முத்தியடைவின் பின் போதிய பராமரிப்பின்மையும், இடப்பெயர், வன்செயலால் பல மரங்கள் அழிந்துபோயின.

ஆடிமாதம் கதிர்காம உற்சவ காலத்தையொட்டிய 12 திருவிழாக்களும் (பெருவிழா) நிறைவாக விசுவநாதப் பெருமான் விசாலாட்சியம்பாளின் திருக்கல்யாண வைபவமும் சிறப்பாக நடை பெறுகின்றன. இத்தினத்தில் சமயவளர்ச்சி கருதிய அன்னதான சபையினர் இவ்வூர் மாணவரின் நன்மை கருதி வருடாவருடம் சைவசமய அறிவுப்போட்டி வைத்துத் தக்க பரிசில்கள் வழங்கி வருகின்றனர்.

இப்பதியில் தினமும் மூன்று வேளை பூசைகளும், பிரதோஷ விழா, சோமவாரம், திருவெம்பாவை, நவராத்திரி மற்றும் சிறப்பான காலங்களில் விழாக்களும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இவ்வூரில் விளையும் தூய மரக்கறி வகைகளைக் கொண்டு சமைக்கப்பட்ட குழைசாதமும் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

மஹோற்சவ காலம் பதின்மூன்று நாட்களும் பக்தர்களுக்குப் புனிதமான அன்னதானம் வழங்கப்படுவது வழக்கம் ஆகும்.

மேலும் இவ்வாலயத்தில் சிவராத்திரி விழா நான்கு சாமமும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இரவு முழுவதும் மங்களவாத்தியம், திருமுறை ஓதல், புராணச் சொற்பொழிவுகள் போன்றன இடம்பெறுகின்றன. அதிகாலை 4 மணிக்கு விரதம் அனுட்டிக்கும் அடியார்கள் இத்தலத்தின் மேற்கேயுள்ள இணுவில் சிவகாமி அம்பாளின் தீர்த்தக் கிணற்றில் நீராடிய பின் ஈர உடையுடன் அதே கிணற்றிலிருந்து தீர்த்தநீர் எடுத்துத் தலையில் சுமந்து கொண்டு திருமுறைகள் ஓதிய வண்ணம் வலம்வந்து ஆலய வாசலிலுள்ள (வேம்பும் அரசும் இணைந்த இடத்தில்) சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவர். இக்காட்சி மிகப் பக்திபூர்வமாக நிகழ்வதாகும்.

பல அற்புதங்களையும் சிறப்புக்களையும் கொண்ட விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானின் திருத்தலம் இணுவில் கோண்டாவில் ஊர்களின் நடுவே அமைந்ததால் ஊர்களின் ஒன்றிணைப்புடன் எமக்குப் பேரருள் புரியும் எம்பெருமான் பல சிறப்புக்களையும் வழங்குவது எமது மக்களின் பெரும் பேறாகும்.

" ஈசனடிப் போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி "
என்று போற்றி வணங்கி அருள்பெருவோமாக.

மூ. சிவலிங்கம்
ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்



## சர்க்கரை வள்ளி கிழங்கு வடை

(சீனிவத்தாளங் கிழங்கு)

சர்க்கரை வள்ளி கிழங்கு அரை கிலோ
பச்சரிசி 2 கப்
பெரிய வெங்காயம் 2
பச்சை மிளகாய் 4
கறிவேப்பிலை
உப்பு தேவையான அளவு

கிழங்கை வேகவைத்து தோலுரித்து மசித்து வைத்துக் கொள்ளவும். அரிசியை 2 மணி நேரம் ஊற வைத்து அரைத்து வைத்துக்கொள்ளவும். பச்சைமிளகாய், பெரிய வெங்காயம் ஆகியவற்றை சிறு துண்டுகளாக நறுக்கி மசித்து வைத்த கிழங்கு, அரிசி கலவையில் சேர்த்து உப்பு சேர்த்து நன்றாக பிசைந்து கொள்ளவும். அடுப்பில் தாய்ச்சியை வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பிசைந்து வைத்த கலவையை வடையாக தட்டி பொன்னிறமாக பொறித்தெடுக்கவும். மிகவும் சுவையான வடை ரெடி.

பத்மினி சிவானந்த சோதி

**மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் வெளியிட்டுள்ள தமிழ் நாட்காட்டி**




மறைமலை அடிகள்

**பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகளுக்கு சிறைத் தண்டனை**

தமது பெற்றோர்களை கவனிக்காத பிள்ளைகளுக்கு சட்டப்படி தண்டனை அளிக்க இந்திய பாராளுமன்றத்தில் ஒரு மசோதா வரவிருக்கிறது.

## அரசியல் கோட்பாடுகளின் அடிப்படை

அறிஞர் அண்ணா மாநில அளவிலான ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்தவர் என்பதால் அவருடைய அரசியல் கருத்துக்களும் விளக்கங்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈடுபாட்டு எல்லைக்குள் அடக்கியே தரப்படுகின்றன. அவருடைய உள்ளத்தின் ஆழ்மையும் பரந்த சிந்தனைத் தெளிவும் அறியப்படாத மயக்கத்தால் அவரைத் தமிழக அரசியலுக்குள், மிஞ்சிப் போனால் இந்திய அரசியலுக்குள் முடக்கி விடுகின்றன.

'மனித இனம் ஒன்றுதான், ஆனாலும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி மொழி, இனம், கலாச்சாரம்,பண்பாடு இருக்கத்தான் செய்யும். அவற்றை அழித்துவிடக்கூடாது ' என்னும் எண்ணத்தின் உந்துதல் அவருக்குண்டு. அந்த உந்துதலினாலும்,

> *பல நாட்டவர், பல இனத்தவர் ஓர் இடத்திலாவது ஒன்றுபட்டுக் காரியமாற்ற நேரிடும். ஆனால் அந்தக் குறிப்பிட்ட காரியம் குறைவின்றி நடந்தேறிய பிறகு ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு இனமும் தத்தமது எல்லை நின்று உழைத்து உயர்ந்து உயர்வினை உலகுக்கு விரும்பி அளித்து உலகப் பொதுநலனை வளர்த்திடவே முனைதல் வேண்டும்.*

என்னும் அடிப்படையினாலேயும் அவருடைய அரசியல் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இனவுணர்வு, நாட்டுணர்வு என்பனவெல்லாம் உள்ளப் பண்பைக் குறுக்காமல் ஓர் எல்லைநின்று உயர்ந்து உலகுக்கு வழிகாட்டவே வழிவகுக்கும்; வழிவகுக்க வேண்டும் என்பது அண்ணாவின் உறுதியான எண்ணமாகும். அந்த உறுதியின் அடிப்படையிலேயே அவருடைய அரசியல் கோட்பாடுகள் மலர்ந்து மணத்தவாறு உள்ளன. ஒற்றுமை உணர்வின் இன்றியமையாமையை உணர்த்த அண்ணா அந்த ஒற்றுமை உலகலாவியதாக வேண்டும் என்றும் எண்ணுகிறார். அவ்வெண்ணத்தின் மலர்ச்சி அவர் தந்த ' நாட்டின் அமைப்பு ', ' ஆட்சி அமைப்பு ', ' ஆட்சி இயக்கம் ' ஆகிய களங்களில் பொலிவு பெறுகின்றது.

## ஆட்சியமைப்பில் உலக ஒற்றுமை

அண்ணா உலக அரசியலில் வெகுவாக ஈடுபட வேண்டிய சூழல் ஏற்படவில்லை. தம் கட்சியினருக்கு உலக அரசியல் பற்றிய கருத்துகளை அவ்வப்போது இதழ்களின் வாயிலாகக் கூறுவதிலேயே தமது உலக அரசியல் நாட்டத்தைக் காட்டினார். உலக அரசியலாளர் என்ற நிலை அவருக்குக் கிடைக்கவில்லை. அது அவருடைய எண்ணத்திலோ செயலிலோ ஏற்பட்ட குறையன்று.

யானை மீது செல்வோர் நாயின் குறைப்புக்கு அஞ்ச வேண்டியதில்லை. காரணம்? அவர்களின் வலிமையா? அன்றன்று. அவர்கள் இருக்கும் இடம் அப்படி. மிக உயர்ந்தது. அரசியல் உலகில் அண்ணா யானை மீது செல்லும் வாய்ப்பை பெற்றிருக்கவில்லை. தமது கல்லூரிப் படிப்பைக் கூடத் தொடர முடியாத ஏழ்மை நிலைதான் அவருக்குச் சொந்தமாயிருந்தது.

அண்ணா கற்று வெளிவந்த காலத்தில் அவருக்குக் கிடைத்த வெளியுலகம் தமிழ்நாடுதான். உலகத் தலைவர்களாக உயர்ந்தவர்கள் தம் அரசியல் வாழ்க்கையின் தொடக்கத்தையே பணம், பதவி, சமுதாயப் படிநிலை (Social Status) போன்ற உயர்ந்த மாளிகை அடுக்குகளிலிருந்து பெறுகின்றனர். உயர்ந்த இடத்தில் இருப்பவர்களைப் பிறர் அண்ணாந்து பார்க்க வேண்டியதாகிறது உயர்வாகத் தெரிகின்றனர்.

அண்ணாவின் அரசியலோ ஓட்டுத் திண்ணையிலும் ஓலைக் குடிசையிலும் சாக்கடை நிரம்பிய சமுதாய வீதிகளிலும் தொடங்குகிறது. அவற்றையெல்லாம் சரிசெய்தும் தூய்மைப்படுத்தி விட்டுமே பிறர் பார்வையைத் தம் பக்கம் ஈர்க்க வேண்டியவரானார். இருப்பினும் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் சிந்தனையின் முகிழ்ச்சியெல்லாம் ஆழ்ந்த கருத்துகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

# இலக்கியங்களில் உலக ஒருமைப்பாடு

அண்ணா தமிழ்நாட்டளவிலோ இந்திய அளவிலோ கூறிய எந்தக் கருத்தும் உலக அளவிலே கருதப்பட வேண்டியனவாகும்.

> *அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கண்டவர். அது மாநில அளவிலான ஒரு கட்சியே ஆகும். இருப்பினும் அரசியல் கட்சிகள் பற்றி, பல்வேறு கட்சிகள் ஒன்றுக்கொன்று நெருங்கியும் அணைத்துக் கொண்டும் பொது நோக்கத்தோடு செயல்படுவதில்தான் ஜனநாயகம் இருக்கிறது.*

என்றும்,

> *இந்த நாட்டில் யாரும் யாரையும் யாரோ என்று கருதவேண்டியதில்லை. எல்லோரும் ஒன்றாகப் பொது மக்களுக்குப் பணியாற்றக் கடமைப் பட்டிருக்கிறோம்.*

என்றும் சட்டமன்றத்தில் உரைப்பது, அண்ணாவின் கட்சிப் பற்றுக்கும் அப்பாற்பட்டு நின்று செயலாற்ற நினைக்கும் பரந்த, அரசியல் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.

**நம்பிக்கை மூலை**

அந்தக் கிளிக்குத் தன் அழகு பற்றி கர்வம் அதிகம். அடுத்த கிளையிலுள்ள காக்கையை அலட்சியமாக பார்க்கும். காக்கை கவலைப்படாது. ஒரு நாள், முரட்டுக் கரமொன்றில் கிளி பிடிபட்டது. கூண்டுக்குள் கிளியை அடைத்து, நாக்கில் பூண்டைத் தேய்த்து பேசப் பழக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த வீட்டுச் சுவரில் காக்கைக்கு மதியச் சோறு காத்திருந்தது.

யாருமற்ற நேரத்தில் காக்கை சொன்னது, உன் அழகு பற்றி கர்வம் கொண்டாய். அதுவே உன்னை சிறை பிடித்தது. அது மட்டுமா? மனிதர்கள் உன்னை, தங்களைப் போல் பேச வைக்க முயல்கிறார்கள். ஆனால், என்னைப் பார். தானாக வந்து, எனக்காக சோறு வைக்கும் மனிதர்கள், என்னை போலவே கா... கா... என்று குரல் கொடுக்கிறார்கள். தோற்றத்தை வைத்து யாரையும் தாழ்வாக நினைக்காதே !

சொல்லி முடித்தது காக்கை, தலை குனிந்தது கிளி

## சர்வஜித்து வருட 2007-2008 பஞ்சாங்கம் அடுத்த இதழில்

வெங்காயம், பூண்டு, வெந்தயம், வெல்லம், பாதாம் மற்றும் உலர்திராட்சை போன்ற உணவுப் பொருள்களை அதிகமாக சேர்த்துக் கொண்டால், அவைகளில் உள்ள புரோட்டீன் நோய் எதிர்ப்பு சக்தியை குளிர்காலத்தில் அதிகமாகத் தரும்.

உலகின் பேச்சு வழக்கில் உள்ள மொழிகள் அண்மைக் கணக்கெடுக்கின்படி 1564 ஆகும்.

**தங்கத்தை விட பிளாட்டினம் எந்த விதத்தில் உசத்தி?**

பிளாட்டினம் சங்கிலியில் ஒற்றை வைரத்தை பென்டென்ட்டாக அணிந்துகொள்வது தற்போது பணக்காரர்களால் விரும்பப்படுகிறது. அது தங்கத்தை விட விலை அதிகமானது. அதே சமயம் ரேடியம்தான் இன்னும் அதிக விலை. ஒரு கிராம் ஐயாயிரம் ரூபாய்க்குக் கிட்டே...

பிளாட்டினம் மிக உறுதியானது. பகட்டில்லாமல் அணிவதற்கு ஏற்ற நகை.

பூகம்பம் ஏற்படுவதற்கு முன் இயற்கைச் சூழலில் ஏற்படும் மெல்லிய மாற்றங்களைப் பறவைகளால் உணர முடியும் என்கிறார்கள். உள்ளுக்குள் பூமி சோம்பல் முறிக்கும்போது பிளவுகளின் வழியாக கந்தக வாசனை வீசுமாம். கடல்நீர் கலங்கலாகத் தெரியுமாம். இவற்றையெல்லாம் பறவைகள் உணர்ந்து சிலிர்த்துக்கொண்டு சிறப்புச் சத்தங்கள் எழுப்புமாம். இதையெல்லாம் கவனிக்க பறவைகளை நகரங்களில் அனுமதித்தால்தானே?

# ஒரு புதிய யுகத்தை நோக்கி

**— லீதரன்**

ஒருத்தன்
இருந்தான்.

(கந்தசாமி என்றால் எத்தனை கிளார்க்குகள்: கிளார்க் என்றால் எத்தனை கந்தசாமிகள்) அவன் ஒருத்தனாகவே இருந்தான். இருந்தும் அவனுக்குக் கல்யாணமாகி இரண்டு குழந்தைகள் வேறு. சராசரி மனிதன் என்று கணிக்கப்படுகிறவனாகவும் கூட அவன் இல்லை. அதற்கும் கீழேயே இருந்தான்.

அவன் மனுசனா?

அதைத்தான் அவனுடைய மனைவி கேட்டாள்: கேட்கிறான்

தினமும் காரியாலயத்துக்குப் போவான் : திரும்பி வருவான் : சாப்பிடுவான் : நித்திரை கொள்ளுவான். மனைவி பேசுவாள். அவன் உசும்பினது கிடையாது. பிள்ளைகள் மனைவியின் பிள்ளைகள் பேசும்.

அவன் பேசாமல் இருக்கிறானாம்.

அவனால் பேசவும் முடியாது. பேசவும் ஒன்றுமில்லை. இடர்ப்பாடுகள் வருகிறபோதும் அதிகம் பேசமாட்டான். அவனால் அந்த இடர்ப்பாடுகள் பற்றி ஒன்றுஞ் செய்ய முடிவதில்லை. இதனாலும் அவனுடைய முந்திய சரித்திரத்தாலும் அவன் ஒருத்தனாகவே இருந்தான்.

முந்திய சரித்திரம் என்ன ?

சுகாதார வசதிகள் பெருகத் தொடங்கிய காலத்துக்கும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை வேசிகளல்லாதவரும் பாவிப்பதில் ஒன்றுமில்லை என்று மனதில் பதிகிற காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் அவனுடைய தாய்தகப்பன் குடும்பம் நடத்தியது அவனுடைய சரித்திரமாய்ப் போயிற்று. தம்பிகள், தங்கைகள் என்று பலதும் பத்தும். தம்பிகள் படித்துத் தங்கைகள் கரைசேர அவன் ஒருத்தனாய்ப் போனான்.

எது எப்படியென்றாலும் அவனைச்சுற்றியிருந்த நெருக்கமும், புழுக்கமும், தாமசமும் ஒழிவதாக இல்லை. வீட்டடில், தெருவில், பஸ்சில், காரியாலயத்தில் எல்லா இடத்திலும் உலகம் இவைகளாலேயே ஆக்கப்பட்டிருப்பதைப் போல இருந்து. இது இப்போ அவனுக்குத் தெரிவதில்லை. இதனாலும் அவன் ஒருத்தனாய்ப் போனான்.

இந்தக்கால ஒட்டத்தின் நடுவில்... ... ... ...

..............

ஒருத்தி அவனுடைய காரியாலயத்துக்கு டைப்பிஸ்டாக வந்து சேர்ந்தாள். அவள் வந்து சேர்ந்தது மற்றக் கிளார்க்குகளுக்கு 'வாய்க்கு அவலா'கப் போன நேரத்தில்தான் இந்த ஒருத்தனுக்கு இவளொருத்தியின் பிரசன்னம் நிதர்சனமாயிற்று. வேலை சம்பந்தமாக இவனோடு அவள் பேசினாள்: சிரித்தாள். அநேகமாகத் தினமும்.

அவனுடைய உறக்கம் கலையத்தொடங்கியது.

"உன்னுடைய ஸ்பீட் என்ன தெரியுமா?" என்று கேட்டான் ஒருமுறை, ஒருநாள். அவள் திரும்பிப்பார்த்தாள்.

"நிமிஷத்துக்கு நூறு பிழைகள்" என்றான். சிரிப்பு முன்னால், பின்னால், எல்லா இடத்திலும். அவள் வெட்டி முறிப்பதைப் போல் இவனைப் பார்த்தாள். இவனும் பார்த்தான். எருமைமாடு உயிர்த்துவிட்டது என்று காரியாலயத்தில் எல்லாரும் பேசிக் கொண்டார்கள். அதை அவனுக்கு ஒரு மாதிரியாகவும், அவளுக்கு ஒரு மாதிரியும் காதில் போட்டார்கள்.

அவனுக்குள்ளே உஷ்ணம் பரவத்தொடங்கியது. அவன் ஒருத்தனானபடியால் அதையும் உணர்ந்தான். அன்று அவன் வீட்டுக்குப்போனபோது ஓர் அதிசயம் நடந்தது.

அவன் மனைவி வழக்கம்போல அவனுடைய குடும்பம் எப்படி அவளுடைய கெட்டிக்காரத்தனத்தால் மட்டுமே ஓடுகிறது என்பதைப்பற்றி விஸ்தாரமாக ஆலாபனை செய்தாள். பல்லவி ஒவ்வொருமுறை ஒவ்வொரு விதமாக வந்தாலும் ஈற்றடி எப்போதும் ஒன்றுதான்.

".....இல்லை."

"சும்மாயிரு. ஏன் வீணாய்ச்சத்தம் போடுகிறாய்?" அவன் அவளை விடப் பெருங்குரலெடுத்துச் சொன்னான். திகைத்துப் போனாள் அவள். பிள்ளைகளும் வாயை மூடிக் கொண்டன. இது அவனுக்கொரு வெற்றியாகப்பட்டது. இது முதன் முதலில்.

பிறகு அவனுடைய பழைய பலகீனத்தைப்பற்றி தன் கணக்கு மனமேல் மட்டத்திற்கு வந்தவுடன் மனைவி பல்லவிக்குப் புது அடி சேர்த்துக் கொண்டான்.

"......இப்போ என்னடா என்றால் சத்தம்வேறு போடுகிறீர்கள். அவன் இதற்கு மறுமொழி சொன்னால். வீடு புறமாகவும், ஆபீஸ் அகமாகவும் மாறின.

டைப்பிஸ்ட் ஒரு வெள்ளரிக்காய். குறை சொல்ல முடியாத வாளிப்பு. எனவே அழகி, என்றுதான் ஆபீசில் எல்லாரும் பேசிக்கொண்டார்கள் என்றுதான் அவளும் நினைத்துக் கொண்டாள்.

டைப்பிஸ்டின் தாக்கம் இரண்டு ரீதிகளில் அவளுடைய முக்கியத்துவம் ஆபீசில் நிலைத்துப்போனபிறகு தன்னை அவளோடு இணைப்பதில் எழுகின்ற முக்கியத்துவம் அவனுடைய நானின் மிதந்த பிரகடனம் - ஒன்று, மற்றது உயிர்ப்பின் நித்தியமான துடிப்பு. மொத்தத்தில் ஒருத்தன் நிலையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். டைப்பிஸ்டைப் பார்க்கப்பார்க்க அவனுக்குள் ஏதோ ஒன்று எரிந்தது. எரிந்ததன் தணல் சிலவேளைகளில் அவன் மனதைச் சுட்டது. டைப்பிஸ்ட் இவனோடும் பேசுவாள். எவனோடும் பேசுவாள். இருந்தாலும் ஆபீசுக்கு வந்த புதிதில் ஐம்பது கண்கள் தன்மேனியை மேய்ந்தபோது இரண்டே இரண்டு பைல்கட்டை மேய்ந்தது அவளுக்கொரு தோல்வியாகவும், அதேநேரத்தில் ஒரு பாதுகாப்பாகவும் இருந்தது. அவனைத் தான் ஒரு நிலையிலிருந்து வந்து கேட்டாள்.

"இது என்னது? எழுத்து விளங்கவில்லை"

ஒரு கணத்தில் அவளைப்பார்த்து பார்த்ததன் தாக்கம் அவன் மனதில் உள்ளே சுவடேறாமலேயே மறுமொழி சொன்னான். பிறகு தினமும் எதையாவது கேட்டுக்கொண்டு வருவாள். அவன் இவளோடு நன்றாகப் பேசத்தொடங்க, அவனும் ஒரு சாதாரண மனிதன்தான் என்று அவளுக்குப் புரிந்தது. அவளுடைய வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது.

பிறகு அவள் மற்றவர்களுடனும் பேசினாள்.

இந்தத் தோல்வியும் வெற்றியும் அவளுடைய மனக்குப்பைக் கூடையின் மூலையில் சென்று பதுங்கியதன் பிறகு ஒரு யுகம் கழித்து ஒருநாள் தன்னுடைய கல்யாணப் பத்திரிகையை எல்லாருக்கும் நீட்டினாள். இவனைப்பார்த்து

"நீங்களும் மிசிசும் கட்டாயம் வரவேணும்" என்றாள்.

"பார்ப்போம்" பத்திரிகையைப் பார்த்தான்

"இதென்னது பார்ப்போம்? கட்டாயம் வரவேணும்" சிணுங்கினாள் அவள்.

"ஓ வருகிறோம" அவளைப் பார்க்க முடியாமல் பார்த்தான். அவள் சிரிப்போடு அப்பால் போய்விட்டாள்.

அவன் தன்னுடைய 'எதிர்பார்ப்பு' வாழ்க்கை நிலையை அதன் ஆரம்பகால நாட்களிலிருந்து எண்ணிப்பார்த்தான். கணத்துக்குக்கணம், நாளுக்கு நாள், வருஷத்துக்கு வருஷம் இதுவே அவனுடைய வாழ்க்கையின் ஆதார சுருதியாக அமைந்து போனது பற்றி மனத்துள் புழுங்கினான்.

'பரீட்சைகள் பாஸ் பண்ணுவேனென்று' எதிர்பார்த்தான்.

'நல்ல வேலை வருமென்று' எதிர்பார்த்தான்.

'உயர்ந்த சம்பந்தம் வருமென்று' எதிர்பார்த்தான்.

'சம்பள உயர்வு வருமென்று எதிர்பார்த்தான்.

.................

இப்போ டைப்பிஸ்ட்.

"இந்த டைப்பிஸ்ட் என்ன செய்யவேண்டும்? என்ன செய்வாள்? "உச்சஸ்யியில் மனத்தின் ஒரு கூறு ராகம் பாடியது. வீட்டுக்குப் போனான்.

மனைவி ஏதோ வேலையாக இருந்தாள். ஷேர்ட்டைக் கழட்டி, முகத்தைக் கழுவி டீயைக் குடித்து, சாய்வு நாற்காலியில் அமர்ந்து, சிகரெட்டைப் பற்ற வைத்துத் தனது ஒருத்தளத்தில் மூழ்க எத்தனிக்கும்போது மற்றக் கூறு மேலோங்கியது.

"ஏய்............ இங்கே வா"

மனைவிக்கு இது கேட்பதில்லை.

"டேய் அம்மாவை வரச்சொல்" பையன் உள்ளேபோனான் கடலலை இருந்தாற்போல் எதையாவது ஒதுக்குகிற மாதிரி.

"என்ன வேணும்?" என்று வந்தவள் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு வாசற்படியில் நின்றாள்.

"அடுத்த கிழமை ஒரு கல்யாணத்திற்குப் போகவேணும். குழந்தைகளை இங்கே விட்டு விட்டுப் போய்வருவோம்." சிகரெட்டைக் கையிலெடுத்துக் கொண்டு வாசற்படியருகே போனான்.

"யாருக்குக் கல்யாணம்?"சந்தேகந் நிறைந்து எல்லாவற்றிற்கு மேலாய் புதிதாய் சாந்தம் நிறைந்து காணப்பட்ட இந்தக் கேள்வியைக் கேட்ட அவளைப் புதிதாய்ப் பார்த்தான்.

........இந்த டைப்பிஸ்ட் என்ன செய்யவேண்டும்? என்ன செய்வாள்? கையைப் பிடித்துத் தன்னருகே அவளை இழுத்தான். அவளுடைய சாந்தம் ஓங்க ஓங்க அவளுடைய அழகு கூடிக்கூடி அவனை ஆகர்ஷித்தது. இந்த மயக்கம் அவன் வார்த்தைகளில் பொங்கியது.

"ஆபீஸ் டைப்பிஸ்டுக்கு" வார்த்தைகளில் தெரிந்த மயக்கத்தின் மறுதாக்கம் அவள் வார்த்தைகளிலும் இருந்தது.

"எப்போ"

"அடுத்த திங்கள்"

..........................

"ஒரு புடவையில்லை" வழக்கமான வெடிப்புமில்லை, புகைப்புமில்லை. டைப்பிஸ்ட் மெல்ல மெல்லக் கரைந்தாள். ஒரு பனிப் புகைப்படலத்தில் இவள் உயிர்த்தாள்.

"பெஸ்டிவல் அட்வான்ஸ் இந்தா வந்திடும். ஒன்றை வாங்கேன்" இல்லையென்றாலும் மனப்பாரம், வருதென்றாலும் மனப்பாரம். இறுதியில் பெண்மை வென்றது. ஒரு புன்னகையை உதிர்த்தாள். "சரி வாங்குவோம்"

"அம்மா......" உள்ளேயிருந்து புத்திர பாக்கியமொன்றில் அலறல் அறை கூவல். வேகத்துடன் திரும்பியோடினாள்.

"ஒரு புதிய யுகந் தோன்றுகிறதா?

மாலையில் அவளுடைய இயக்கங்களில் ஓர் புதுவேகத்தை அவன் பார்த்தான்: புரிந்து கொண்டான். அவனுக்குள் திரும்பவும் உஷ்ணம் பரவத் தொடங்கியது. மாலையின் தாமதத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. அவளோ சமையலறையில் சுழன்றாள்.

வெளியே உலாவிவிட்டு உஷ்ணத்தைக் கூட்டிக் கொண்டு திரும்பினான். அவன் திரும்புவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவள் சுழன்று இயங்கினாள். அவனுக்கோ சாப்பாட்டின் தாமசத்தைப் பொறுக்க முடியவில்லை. 'எதிர்பார்ப்பு வாழ்க்கையின் ஆவி' அவனை மெல்லத்திரும்பவும் எழும்போல இருந்தது. அவளுடைய கையைப் பற்றினான்.

".......பொறுங்கோ" அவளுடைய புதிய பொறுமை அவள் உடல் முகம் வழியே பாய்ந்து அவளைப் புதியவளாக்கி அவனுடைய ஆவியை விரட்டியது. அவன் தனது மௌனத்தியான ஸ்தானமான சாய்வு நாற்காலியில் குந்தாமல் அடுக்களையில் நின்றவாறே நிலைகொள்ளாமல் ஓடியாடித் தவிப்பவளைப் பார்த்து ரசித்தான்.

'ஏன் நிற்கிறீர்கள்?' நிமிர்ந்தும் நிமிராமலும் அவனைப் பார்த்தாள்.

"..................ம்" வெளியே மெல்லப் போய்விட்டான். போனவன் பொறுமையில்லாமல் சாய்வு நாற்காலியில் வேகமாகப் புகைத்தான். அவள் பாத்திரங்களை உருட்டிப் பிள்ளைகள் நித்திரையாகிப் போனதை உறுதிப்படுத்திக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவள் வருமட்டும் அவளைப் பற்றியே சிகரட்டின் புகையில் தன்னையிழந்து யோசித்தான். உள்ளிழுப்பிலும், வெளிவிடுதலிலும் அவளே வந்து போனாள்.

அவள் வந்து விளக்கை அணைக்க, தீர்க்கமான அவசரத்துடன் சிகரட்டைத் தீய்த்து எறிந்தான்.

அவன் இப்போ 'ஒருத்தன்' இல்லை.



**முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சனவரித் திங்கள் 24ஆம் நாள் சென்னை முத்தமிழ்ப் பேரவை சார்பில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார் அவர்களுக்கு இயல்செல்வம் விருது வழங்கிப் போற்றிப் பாராட்டியுள்ளார்.**

# பொன்மொழி மாலை

◌ ஆங்கிலத்திலும்
❑ பறவை மிருகம்
✱ பழமொழி அல்ல

## ஏ

52. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்
✱ 53. ஏற்பது இகழ்ச்சி
✱ 54. ஏமாறாதே, ஏமாற்றாதே

## ஐ

55. ஐயர் வரும்வரை அமாவாசை நிற்குமா?
56. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
✱ 57. ஐயமிட்டுண் - ஆ - சூடி

## ஒ

58. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்
◌ 59. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
◌ 60. ஒற்றுமையே பலம்
✱ 61. ஒப்புரவு ஒழுகேல் - ஆ - சூடி

## ஓ

62. ஓடமும் வண்டியில் ஏறும் வண்டியும் ஓடம் ஏறும்
✱ 63. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
✱ 64. ஓடும் புளியம் பழமும் போல உவமானம் -
அதிக நெருக்கமின்

## உயிர் மெய் எழுத்துக்கள்

## க

65. கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் வேணுமா?
66. களவும் கற்று மற
67. கந்தையானாலும் கசக்கி கட்டு
68. கண்ட பாவனையில் கொண்டை முடியாதே
69. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்
❑ 70. கல்லினுள் தேரைக்கும் வல்லபிரான் படி அளப்பான்
❑ 71. கஞ்சன் எச்சில் கையால் காகம் துரத்தான்
72. கண்டதைக் கடிக்க சண்டியனாவான்
கண்டதையும் பழக்க பண்டிதனாவான்
73. கடுகு சிறிது காரம் பெரிசு
74. கத்தியை தீட்டாதே புத்தியைத் தீட்டு

ரோகிணி
New Malden



**தமிழர் தகவல்**

அட்டையில் உங்கள் குழந்தையின் படம் இடம்பெற வேண்டுமா? பிறந்தநாள் மாதத்துக்கேற்ற விதமாக ஒரு மாதத்திற்கு முன் புகைப்படம் அனுப்பி வைத்தால் அட்டையில் இடம்பெறும். முற்றிலும் இலவசம்.

பதிப்பாசிரியர்

# நீரிழிவும் நிலையான வாழ்வும்

## நீரிழிவு - வரலாற்றுக் குறிப்புகள்

இந்திய மருத்துவத் தந்தை சுசுருதா கி.மு 5ஆம் நூற்றாண்டில் எழுதிய சரகசம்ஹிதை என்ற மருத்துவ நூலிலும், இந்திய மருத்துவத்தின் முதல் நூல் என்று சொல்லப்படுகின்ற அக்னிவேச சரகரின் நூலிலும் சித்த மருத்துவ நோய் கணிப்புகளின் முன்னோடி என்று கருதப்படுகின்ற யூகிமுனியின் நூலிலும் 20 வகையான சிறுநீர்நோய்களைப் பற்றியும் அவற்றின் தன்மைகள், அறிகுறிகள், காரணங்கள் சிகிச்சை முறைகளும் விவரிக்கப்பட்டள்ளது. அதில் தேனை ஒத்த இனிப்புடன் சிறுநீர் வெளியேறுவதை ' ப்ரமேகம் ' ' மதுமேகம் ' என்று சொல்லப்பட்டுள்ளது. இந்திய மருத்துவர்கள் சரக் மற்றும் சுசுத்ரா கி.மு 400, 500களில் சிறுநீர் தித்திப்பாகப் போவதையும், அவற்றில் எறும்புகள் மொய்ப்பதையும் வைத்து இந்நோயினைக் கண்டறிந்து குண்டாகவும் அதிகமாக சாப்பிடுபவர்களுக்கும், உடற்பயிற்சி இல்லாமல் இருப்பவர்களுக்கும் இந்நோய் வருவதாக எழுதியிருக்கிறார்கள்.

' பாப்ரஸ் ' என்ற எகிப்திய புத்தகத்தில் அதிகமாக வெளியேறும் சிறுநீர் நோய்பற்றி எழுதப்பட்டுள்ளது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்கத்தின் மருத்துவ தந்தை எனப்படுகின்ற ஹிப்போகிரடிசின் மாணவர் அரிடியஸ் என்பவர் தான் ' டயாபிடிஸ் ' என்ற வார்த்தையினை இந்நோய்க்குப் பெயராக வைத்தார். ' டயாபிடிஸ் ' என்ற கிரேக்க வார்த்தைக்கு - to pass through - கடந்து செல்லுதல் என்று பொருள்.

வீல்ஸ் என்ற மருத்துவ அறிஞர் நீரிழிவின் தன்மை, சிறுநீர் இனிப்பாக இருக்கும் என்பதை வலியுருத்தி டயாபிடிஸ் என்ற சொல்லுடன் மெலிடஸ் என்ற வார்த்தையை சேர்த்தார். மெலிடஸ் என்றால் தித்திப்பு / இனிப்பு என்று பொருள். டயாபிடிஸ் மெலிடஸ் என்பது தித்திப்பு சுவையுள்ள நீர் உடலைக்கடந்து வெளியேறுதல் என்று அர்த்தமாகிறது.

அவினீசியா என்ற அராபியரின் குறிப்புகளில் நீரிழிவு பற்றி நிறைய செய்திகள் கிடைக்கின்றன. மேத்யுடாப்சன் என்ற அமெரிக்கர் சிறுநீரில் சர்க்கரை உள்ளதை தெரிவிக்கின்றார்.

1800களில் ஜோஜில் கிரைஸ்ட் என்ற சிறுநீரக மருத்துவர் முதன் முதலில் சிறுநீரில் குளுகோஸ் (சர்க்கரை) வெளியேறுவதை கண்டறிந்தார்.

1869களில் லாங்கர் ஹான்ஸ் என்ற மருத்துவ மாணவர் கணையத்தின் குறிப்பிட்ட உயிரணுக்கள் பழுதுபடுவதுதான் நீரிழிவுக்குக் காரணம் என அறிந்து அறிவித்தார். அவ்வுயிரணு திட்டுகளுக்கு லாங்கர் ஹான்ஸ் திட்டுகள் என்றே பெயரிடப்பட்டது. கணையம் பாதிப்படைவதால் உண்டாகும் நீரிழிவு நோய்க்கு முக்கிய மருந்தான இன்சுலின் 1922களில் பிரெட்ரிக் பாண்டிங் என்ற அறுவை மருத்துவர் மற்றும் அவரது மாணவரான சார்லஸ் பெஸ்ட் என்பவர்களால் கண்டறியப்பட்டு உலகிற்கு வழங்கப்பட்டது.

மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு டையோஸ்டோன் என்ற செயற்கைக் கணையம் வளர்ந்துள்ளது.

இதயம், சிறுநீரகம் போன்று மாற்று உறுப்பு அறுவை சிகிச்சையினைப் போல கணைய மாற்று சிகிச்சை சாத்தியப்படவில்லை. ஆனால் கணையத்திலுள்ள நீரிழிவு நோய்க்குக் காரணமான பீட்டா செல்களை மாற்றியமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்த ஆய்வுகள் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளது.

## நீரிழிவு - என்றால் என்ன ?

நம் உடலில் பான்கிரியாஸ் என்னும் கணையத்திலிருந்து இன்சுலின் என்ற ஒரு இயக்கு நீர் சுரக்கின்றது. அது நம் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை சமநிலையில் கட்டுப்படுத்தக்கூடிய செயலினை செய்கின்றது. இந்த இன்சுலின் அளவு குறைந்தாலோ அல்லது சுரக்கவில்லை என்றாலோ இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகின்றது. இந்த பாதிப்பைத்தான் Diabetes - நீரிழிவு - சர்க்கரை வியாதி என்கின்றோம்.

நமது உடலில் உள்ள நாளமில்லா சுரப்பிகளில் மிகப்பெரியது பான்கிரியாஸ் எனப்படும் கணையச் சுரப்பியாகும். இது நம்முடைய வயிற்றில் சிறு குடலுக்கருகில் இரைப்பைக்கு கீழ் முதுகெலும்புக்கு முன்புறம் அமைந்துள்ளது. இதில் உயிரணுக்கள் லாங்கர் ஹான்ஸ் திட்டுக்கள் என்ற பெயரில் திட்டு திட்டாக அமைந்திருக்கின்றன. இவற்றில் ஆல்பா என்ற உயிரணுக்கள் குளுக்கான் என்ற இயக்கநீரை சுரக்கின்றது. இது கல்லீரலில் கிளைக்கோஜெனை குளுக்கோசாக மாற்றி இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது.

பீட்டா உயிரணுக்கள் இன்சுலின் என்ற இயக்குநீரை சுரக்கின்றது. இந்த ஹார்மோன் மட்டும்தான், மற்ற ஹார்மோன்கள் இரத்தத்தில்

சர்க்கரையின் அளவைக் கூட்டுகிற போது அந்த அளவைக் குறைத்துக் கட்டுப்படுத்தி சமன் செய்கின்றது.

நாம் உண்ணும் உணவு இரைப்பையை அடைந்ததும் சர்க்கரையாக மாற்றப்பட்டு இரத்தத்தில் கலக்கப்படுகின்ற அதே வேளையில் கணையத்தினால் இன்சுலின் என்ற இயக்க நீர் சுரக்கப்பட்டு இரத்தத்தை அடைந்து சர்க்கரையை சக்தியாக மாற்றுகின்றது. உடல் சக்தியினை வழங்குவதுதான் இன்சுலினுடைய பிரதான வேலை. இந்த வேலையில் மாறுபாடோ, பாதிப்போ ஏற்படுவதைத்தான் நாம் நீரிழிவு நோய் என்கிறோம்.

## நீரிழிவு நோயில் வகைகள் உண்டா?

ஆம். உண்டு. நோய் கூறுகளின் அடிப்படையில் இரத்தத்தில் குளுக்கோஸ் அதிகமாவதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

முதல் வகை: கணையத்தில் உள்ள இன்சுலின் சுரக்கக்கூடிய பீட்டா செல்கள் தன் தடுப்பாற்று வினையில் சிதைபட்டு இன்சுலின் இல்லாத நிலை.

இரண்டாம் வகை: இன்சுலின் பற்றாகுறை அல்லது அதன் செயல்திறன் குறைவதினால் அதிகமாக குளுக்கோஸ் உற்பத்தி ஆகும் நிலை.

முதல் வகையில் இன்சுலின் இல்லாததால் இவர்களுக்கு இன்சுலின் ஊசி ஆயுள் முழுவதும் போட்டுக்கொள்ள வேண்டியது அவசியம். இல்லை என்றால் இரத்தத்தில் சர்க்கரை அதிகமாகி நினைவிழக்கும் நிலைக்கு செல்லும். இவை பெரும்பாலும் சிறு வயதினருக்கு அதிகமாக காணப்படும். சில சமயங்களில் கணையம் முழுவதும் கல்கள் உண்டாகி அதனால் இன்சுலின் சுரப்பது தடைபடுவதினால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

இரண்டாம் வகை நீரிழிவு நோய் இன்சுலின் சுரந்தும் போதிய அளவில் இல்லாமல் இருப்பதாலும், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகிக்கொண்டு இருப்பதாலும் நீரிழிவு நோய் ஏற்படுகின்றன. பெரும்பாலும் இவ்வகை நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுபவர்கள் அதிகம். குடும்ப வழி, அதிக உடல் பருமன், உடற்பயிற்சி மற்றும் உழைப்பு இன்மை போன்றவற்றினால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றன.

இவ்விருவகைகளைத் தவிர மரபு அணுக்களில் ஏற்படும் குறைபாடுகளினாலும், அக்குறையினால் இன்சுலின் செயல்திறனில் ஏற்படும் மாற்றத்தினாலும், கணையத்தில் ஏற்படும் நோய்களினாலும், மற்ற நாளமில்லா சுரப்பிகளின் பாதிப்புகளினாலும், சிலவகையான மருந்துகளை தொடர்ந்து சாப்பிடுவதினாலும் நீரிழிவு நோய் ஏற்படுகின்றன. இதைத் தவிர பிரசவக் காலங்களில் ஏற்படும் சர்க்கரை நோய் குறிப்பிடத்தக்கது.

## நீரிழிவு நோயில் அறிகுறிகள்

நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள் அதன் தீவிரத் தன்மையின் அடிப்படையில் வேறுபடலாம். அதிக தாகம், அதிகமாக சிறுநீர் பிரிதல், எடை இழப்பு, உடல் பலகீனம், சக்தியில்லாமை, தளர்ச்சி, அதிக பசி போன்ற பலவிதமான அறிகுறிகள் தென்படும். பெரும்பாலும் முதல் வகை நீரிழிவு நோயின் அறிகுறிகள் உடனே தெரியவரும். இரண்டாம் வகை நோயில் புண்கள் ஆறாத நிலை, சிறுநீர் தாரையில் அரிப்பு, கண்பார்வை மங்குதல் போன்றவற்றிற்காக பரிசோதனை செய்யும்போது நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்படுகிறது.

## பரிசோதனையில் எப்படி அறிவது?

நீரிழிவு நோய்களுக்கான அறிகுறிகள் தெனபடுகையில் இரத்தத்தை பரிசோதனை செய்யும்பொழுது 200 மி.கி ▫ டெசிலிட்டர் அளவில் இருந்தாலோ, காலையில் சாப்பிடாமல் வெறும் வயிற்றில் இரத்தப்பரிசோதனையில் சர்க்கரையின் அளவு 126 மி.கி மேல் இருந்தாலும், சாப்பிட்டு அல்லது 75 கிராம் குளுக்கோஸ் சாப்பிட்டு 2 மணிநேரம் கழித்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 200 மி.கி ▫ டெசிலிட்டர் இருந்தால் அவருக்கு நீரிழிவு நோய் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. இதற்கு இடைப்பட்டதில் இருப்பவர்களுக்கு வாய்வழி குளுக்கோஸ் சகிப்பு பரிசோதனை செய்யவேண்டும்.

இப்பரிசோதனைக்கு முன் மருந்து மாத்திரைகள், உணவு எதுவும் இல்லாமல் இருக்கவேண்டும். புகைப்பிடிக்கக் கூடாது. காலையில் வெறும் வயிற்றில் இரத்தத்தில் சர்க்கரை பரிசோதனையும் சிறுநீர் பரிசோதனையும் செய்யவேண்டும். பின்பு 75 கிராம் குளுக்கோஸ 250 – 750 மிலி தண்ணீரில் கலந்து கொடுக்கவேண்டும். அரை மணிக்கு ஒரு தடவை 2 மணி நேரத்திற்கு இரத்தம், சிறுநீரில் சாக்கரை அளவைப் பார்க்கவேண்டும். அல்லது இரண்டு மணிநேரத்திற்குப் பிறகு ஒரே தடவை இரத்தத்தில் மற்றும் சிறுநீரில் சர்க்கரையின் அளவை பரிசோதிக்க வேண்டும். அப்பொழுது சர்க்கரையின் அளவு வெறும் வயிற்றில் 126 மி.கி மேலும் இரண்டு மணி நேரத்தில் 200 மி.கி மேல் அளவில் இருந்தால் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார் என அறியலாம். குளுக்கோஸின் சகிப்புத் தன்மை குறைவானவர்களுக்கு 2 மணி நேரத்திற்கு பிறகு சாக்கரையின் அளவு 140 மி.கிக்கும் மேலும் 200 மி.கிக்குள்ளும் இருந்தால் இவர்கள் உணவு முறையிலும், உடல் பயிற்சியிலும் அக்கறை செலுத்தினாலே சர்க்கரை நோயும் அதனால் வரக்கூடிய பின் விளைவுகளையும் தவிர்க்கலாம்.

## நீரிழிவினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்ன?

முன்பு கூறியதுபோல் உடலில் உள்ள எல்லா உறுப்புகளையும் பாதிக்கக்கூடியது நீரிழிவு நோய். கண்பார்வை மங்கிக் குறைதல், கண்பார்வை இழப்பு, இதயபாதிப்பு, மாரடைப்பு, இரத்த அழுத்தம், மூளையில் இரத்தக் குழாய் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, புண் ஆறாத நிலை, மாதவிடாய்க் கோளாறுகள், தோல் நோய்கள் போன்ற பலவித உடல் உறுப்பு பாதிப்புகளுக்கு மூல காரணமாக அமைவது நீரிழிவு நோய்.

## தடுப்பு முறைகள் யாது?

இது பரம்பரையாக மரபுவழி வரக்கூடியது என்பதால் தாய் தந்தையருக்கு நீரிழிவு நோய் இருந்தால் தங்கள் குழந்தைகளுக்கு வர வாய்ப்பு உண்டு. எனவே ஆரம்ப நிலையிலேயே உணவுக் கட்டுப்பாடு, உடற் பயிற்சி மற்றும் உடல் பருமனாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அடிக்கடிப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். உடல் எடைக்கேற்ப உணவு பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுதல், மன உளைச்சல் இல்லாமல் இருப்பது யோகாசனப் பயிற்சி, ஆழ்நிலை தியானங்கள் மேற்கொள்ளுதல் போன்றவற்றை மேற்கொண்டால் நீரிழிவு நோயையும், அதனால் வரக்கூடிய பின்விளைவுகளையும் தவிர்க்கலாம்.

#### சர்க்கரை நோய் வர அதிய வாய்ப்புள்ளவர்கள்

குடும்பத்தில் நீரிழிவு
அதிக எடை
இடுப்பு விகிதம். 0.80 பெண்கள்; 0.90 ஆண்கள்
கருவுற்றகாலத்தில் சர்க்கரை நோய் இருத்தல்
இரத்தக்கொதிப்பு
அதிக கொழுப்பு
குளுக்கோஸ் சகிப்புத் தன்மை குறைவானவர்கள்
30 வயதிற்கு மேல்
இரத்தக் குழாய் பாதிப்பு
அடிக்கடி நோய் தொற்று, காச நோய், புண் ஆறாத நிலை

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை சோதிக்கும்பொழுது அவருடைய எடை, உயரம், இடுப்பு சுற்றளவு இவை கணக்கிடப் படுகிறது. சரியான எடையில் இருக்கிறாரா, நாடி துடிப்புகள் சீராக இருக்கின்றதா அல்லது முறையற்று செயல்படுகிறதா, கை, கால், கழுத்துகளில் நாடித்துடிப்பை அறிய முடிகிறதா என்று பார்க்கவேண்டும். ஏன் என்றால் சர்க்கரையினால் இதன் குழாய்கள் பாதிக்கப்பட்டு இருந்தால் நாடித் துடிப்பை சரிவர அறிய முடியாது.

அவருடைய இரத்தக் கொதிப்பைப் படுத்து இருக்கும்பொழுது உட்கார்ந்து இருக்கும்பொழுது, நிற்கும்பொழுது அளக்க வேண்டும். இவ்வாறு பரிசோதனை செய்யும்பொழுது அதிக வேறுபாடுகள் இருந்தால் அதற்கு தக்க சிகிச்சை கொடுக்கவேண்டும். கண் பரிசோதனை, கால், தோல், இதயம், நுரையீரல் மற்றும் வயிற்றுப் பரிசோதனைகள் செய்ய வேண்டும்.

## ஆய்வுக்கூட பரிசோதயையில்

சிறுநீரகத்தில் புரதம் வெளியாகுதல், சர்க்கரை மற்றும் இரத்த அணுக்கள் படிவது, சீழ் அணுக்கள் போன்றவற்றையும் கிருமி வளர்ச்சி பரிசோதனை போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். இரத்தத்தில் சர்க்கரையைத் தவிர யூரியா, கிரியாடினின் கொழுப்பு சத்துகளையும் பார்க்க வேண்டும். இதய வரைப்படம் மற்றும் எக்ஸ்ரே படம் எடுத்து இதயத்தில், நுரையீரலில் ஏதாவது கோளாறுகள் இருக்கின்றனவா என்பதை அறியவேண்டும்.

உடலின் எடை, இரத்தக் கொதிப்பு மற்றும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவுக்கு ஏற்றவாறு மாத்திரைகள் சாப்பிட வேண்டும். சர்க்கரையின் அளவு நிலையான அளவுக்கு வரும் வரை 2–4 வாரங்களுக்கு ஒருமுறை பரிசோதித்துக் கொண்டு மாத்திரைகள் சாப்பிடவேண்டும். ஆரம்ப நிலையில் சர்க்கரையின் அளவு நிலையிலான அளவில் இருந்தால் 3 மாதத்திற்கு ஒருமுறை இரத்தத்தில் சர்க்கரையின் அளவை சோதித்துக் கொள்ள வேண்டும். 6 மாதத்தில் சர்க்கரையின் அளவு நிலையாக இருக்கின்றதா என்பதை அறிய ஹிமாகுளோபின் ஏ, சி பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

#### வருடம் ஒரு முறை

கண்பரிசோதனை, சிறுநீரக சம்பந்தப்பட்ட பரிசோதனை, இதயப்பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

நீரிழிவு என்பது இழிவல்ல
அது ஒரு நோயுமல்ல
அது ஒரு குறைபாடு
அலட்சியப்படுத்த முடியாத
அலட்சியப்படுத்தக் கூடாத குறைபாடு..

உடல் உறுப்புகளின் பிரதானப் பணியைச் செய்வதினாலேயே பெருமூளை என்கின்றனர். சிந்தனைக்கும் நினைவாற்றலுக்கும் பெருமூளையே காரணமாகிறது. பார்வை, சப்தம். வாசனை. ருசி. பேச்சு, உடம்பின் அசைவு போன்று பல இயக்கங்களுக்கும் பெருமூளையில் பல பாகங்கள் உள்ளன.



மேன்மை கொள்

# சைவ நீதி



"கங்கைக்கு நிகரான நீருமில்லை, காசிக்கு நிகரான ஊருமில்லை" என்பது இந்துக்களின் திருமந்திரம்.

காசி புண்ணிய தலம். அதன் எல்லையில் காலடி பட்டதுமே பண்ணின பாவங்கள் விட்டொழிகின்றன. கங்கையில் மூழ்கி எழுந்தால் பூர்வ கர்மாக்கள் கரைந்து போகின்றன.

இந்துக்களுக்கு மட்டுமல்ல, புத்த மதத்தினருக்கும் காசி சிறப்புத் தலம். ஞானம் பெற்றபின் கௌதம புத்தர், தன் முதல் போதனையை இங்கேதான் துவக்கினார்.

மகாவீரருக்கு முன்னோடியாக இருந்த தீர்த்தங்கர பரஸ்வநாதர் அவதரித்த இடம் என்பதால் ஜைனர்களுக்கும் காசி புனிதத் தலம்.

காசியில் திரும்பிய பக்கமெல்லாம் கோயில்கள் தான். சிவனுக்கு பிரதானமான வழிபாடு. இருநூறுக்கும் மேற்பட்ட கோயில்கள் காசியை அலங்கரிக்கின்றன.


குறுகலான தெருக்கள், காசியின் இதயமான விஸ்வநாதர் கோயிலுக்கு கொண்டு சேர்க்கின்றன. மகாதேவனின் ஜோதிலிங்கம் இங்கு மண் தோன்றிய காலத்திலிருந்தே எழுந்தருளியிருப்பதாக கருதப்படுகிறது.

இங்கு ஈசனின் லிங்கத்தைத் தொடலாம். கங்கை நீர் கொண்டு பக்தரே அபிஷேகம் செய்யலாம்.

காசிநாதனை கண்கள் தரிசித்ததுமே களைத்த உடல்களில் கூட புத்துணர்ச்சி. விஸ்வநாதனை விரல்கள் தொட்டதுமே வேதபுரியான கயிலைக்கே சென்று மீண்டது போன்ற பரவசம்.

ஈசனுக்கு இணையான புகழ் பெற்ற அன்னை விசாலாட்சி தன் நாதனின் கோயிலில் தனக்கொரு சந்நிதி அமைத்துக் கொள்ளாமல் தனக்கென்று தனிக்கோயில் கொண்டு தனித்து நின்று அருள்கிறாள்.

தன் பிராணநாதனின் திருமேனியின் ஒரு பகுதியாகவே கருதப்படும் காசியைத் தன் சக்தி பீடமாக அன்னை சக்தி தேர்ந்தெடுத்தது ஆச்சரியமே இல்லை.



விஸ்வநாதரை தரிசித்தப் பின் காசியின் அதே குறுகலான தெருக்களில் நடந்தால், அன்னை விசாலாட்சியின் திருக்கோயில்.

முக்திக்கு வித்திடும் காசியில் அமைந்திருப்பதால் அன்னையின் சக்தி பீடங்களில் பெரும் பெருமை கொண்ட பீடம் காசி விசாலாட்சி.

கடவுள்களின் நதியாகப் போற்றப் படும் கங்கைக் கரையில் அமைந்திருக்கிறது கோயில். காசி விஸ்வநாதர்





கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.

தென்னாட்டு வழக்கப்படி கோபுரம். நுழைந்ததும் அன்னை தரிசனம். கருவறையில் அன்னை விசாலாட்சி இரண்டு திருக்கோலங்களில் காட்சி அளிக்கிறாள்.

சுயம்புவாகத் தோன்றிய வடிவம் ஒன்று. நின்ற கோலத்தில் நித்தம் அருள்புரியும் சிற்ப வடிவம் மற்றொன்று.

சுயம்பு திருமுகத்தை வெள்ளிக் கவசம் அலங்கரிக்கிறது. சுந்தர வடிவத்தைப் பட்டாடைகளும் பலநிற மலர்களும் அலங்கரிக்கின்றன.

அன்னையின் திருமுகத்தில் மஞ்சள் குங்குமம். திருமேனியில் பளபளக்கும் பட்டு. பரவசப்படுத்தும் மலர்கள், பூமாலைகள் !

வினைகளை அறுத்து, விசனங்களைக் களைந்து, வேண்டும் வரங்களை வாரி வழங்குகிறாள் விசாலாட்சி.

சக்தி பீடம் என்றால் என்ன?

தட்சனின் மகளாக அவதரித்தாள் உமையவள். அருமை நாதனுக்கு அப்பன் அவமதிப்பு செய்தபோது, தட்சனின் யாகத் தீயில் பாய்ந்தாள். தன் காதல் நாயகியைப் பிரிய இயலாத, கயிலைநாதன் அவள் பூத உடலை தோளில் சுமந்து பிரபஞ்சத்தில் அலைந்தான்.

அகிலநாயகனே அடங்கிப் போனால் அனைத்து யிரும் என்ன ஆவது?அண்டமே தலைகீழானது.

சமுத்திரம் நதிகளுக்குள் பாய்ந்தது. சூரியன் மேற்கில் உதித்தான். மிருகங்கள் பறக்கத் துடித்தன. மீன்கள் தரையில் நடக்க முனைந்தன. மழை, வானை நோக்கி பொழிந்தது.

சர்வேஸ்வரனை சமாதானப்படுத்த முடியாமல் சகல தேவரும்ஓங்கி உலகளந்த உத்தமன் தாள்களில் வீழ்ந்தனர். பச்சை வண்ணன் பாங்குடன் தன் சக்ராயுத்தை ஏவினார். சுழன்று சென்றது திருச்சக்கரம். பிறைசூடிய பித்தனின் தோளில் பிணமாக கிடந்த தாட்சாயணியின் உடலைத் துண்டம் துண்டமாக வெட்டிப் போட்டது.

தெளிந்தார், ஈசன். '' யாகத்தீயில் வீழ்ந்த கணமே சக்தி என்னை சேர்ந்து விட்டாள். ஆனால் உள்நின்று ஒளிரும் சக்தியை விடுத்து, வெளிப்பூச்சு அழகில் உள்ளத்தைப் பறிகொடுப்பது பரிதாபம் என்பதைக் காமக்கனலில் சிக்குற்று அவதியுறும் மாந்தருக் கெல்லாம் படிப்பினையாகப் புகட்டவே விளையாடினேன்... '' என்றுரைத்தார்.

சக்தி சமேதரராக அனைவருக்கு தரிசனம் தந்துப் பரவசப்படுத்தினார்.

உமையவள் உடலிலிருந்து விடுபட்ட அம்சங்கள் எல்லாம் எங்கெங்கு வீழ்ந்தனவோ, அந்தந்த தலங்கள் எல்லாம் சக்தி பீடங்களாக விளங்கட்டுமே... என்று இறைவன் அருளினார்.



புண்ணிய பாரதத்தில் அன்னையின் அம்சங்கள் ஐம்பத்தி ரண்டு இடங்களில் வீழ்ந்ததாக தந்திர சூடாமணி சொல்கிறது. அன்னை சக்திக்கு அப்படித்தான் ஐம்பத்திரண்டு பீடங்கள் அமைந்த தாகப் புராணம் எடுத்துரைக்கிறது.

காசியில் அன்னையில் திருச்செவிகளிலிருந்து அற்றுப்போன குண்டலம் வீழ்ந்தது. அப்படி வீழ்ந்த தலம் மணிகர்ணிகை பீடத் தலமானது.

கர்ணம் என்றார் காது, அன்னை அணிந்திருந்த விலைமதிப்பற்ற மணிகள் பதித்த காதணி வீழ்ந்ததால் பீடத்தின் பெயர் ' மணிகர்ணிகை ' ஆயிற்று.

காசியின் விளிம்பில் ஓடும் கங்கைக் கரையின் மற்ற தீர்த்தங்களை விடவும் மணிகர்ணிகைக்கு மேன்மை அதிகம். கங்கையில் நின்று மணிகர்ணிகைப் படித்துறையை நிமிர்ந்து பார்த்தால் மெய் சிலிர்க்கும்.

மரணத்தை இங்கு போல் வேறெங்கும் மகிழ்ச்சியுடன் வரவேற்பதில்லை. அன்னை இட்ட அமுத பிச்சை தான் இந்த உயிர். அதை உள்ளிருத்திச் சுமக்கும் வாகனம்தான் இந்த உடல். மரணம் என்பது வாழ்க்கையின் முரட்டுதனமான முற்றுப்புள்ளி இல்லை. அது பிறவியின் முடிவில் மலரும் ஒரு மேன்மையான மாற்றம். இந்தத் தெளிவு மணிகர்ணிகையில் எரியூட்டுபவர்களின் முகங்களில் கூட தென்படுவது மகத்தான சிறப்பு.

அன்னையின் திருச்செவியில் அணிந்திருந்த காதணிகள் இந்த தீர்த்தத்தில் வீழ்ந்தபோது நடந்த ஒரு சம்பவம்...

உயர் குலத்தை சேர்ந்த சிலர், ஈசன் கோயிலில் பணிவிடைகள் செய்து புகழ் கொண்டிருந்த நேரம் அது. விண்ணிலிருந்து வீழ்ந்த சிவப்புக் கல் பதித்த காதணி அவர்கள் கவனத்தை கவர்ந்தது... விலைமதிப்பற்ற ஆபரணத்தைக் கண்டதும் குலப்பெருமையை மறந்தனர்.

' மன்னருக்கு மன்னராக இருப்பவரிடம் கூட மதிப்பு மிக்க இதைப் போன்ற ஆபரணம் இருக்காது. இந்த ஒரு காதணியை விற்றால், ஒன்பது தலைமுறைகள் உட்கார்ந்து உண்ணலாமே ' எனப் புத்தி பேதலித்தது. அந்தக் காதணியை அவர்கள் அவசர அவசரமாக ஒளித்து வைத்தனர்.



சர்வேஸ்வரனிடமிருந்து ஒளிக்க முடியுமா? வாழ்பவர்களுக்கெல்லாம் வழிகாட்டிகளாக விளங்க வேண்டியவர்களுக்கு இப்படி ஒரு கள்ளத்தனமா? ஆண்டவனுக்கு சேவை செய்பவர்கள் இப்படி அற்பத்தனமாக நடக்கலாமா?

ஈசன் சினந்தான். ' ஆலயத்தில் பணிபுரிய இனி இவர்களுக்கு அருகதை இல்லை ' என வெகுண்டு மொழிந்தான்.

அன்னையின் காதணி என்று தெரியாமல் அற்பச் செயலில் ஈடுபட்டவர்கள் அரண்டு போனார்கள். ' இழி செயல் செய்ததற்கு ஏற்ற தண்டனை தா! ஆனால் எங்களை உன்னிடம் இருந்து விலக்கி விடாதே ' என்று இறைவன் தாள்களில் விழுந்து கெஞ்சினர்.

அன்னைக்கு இரக்கம் அதிகம். காசியில் இருந்தவர்கள் சிவனுக்கு இத்தனை நாள் சேவை செய்தவர்கள். தங்கள் தவறை உணர்ந்து தலை தாழ்ந்து நிற்பவர்கள். மலைமகள் அவர்களை மன்னிக்கத் துணிந்தாள்.

'' உங்களுக்குத் தண்டனைத் தரப் போவதில்லை. ஆனால் படிப்பினைத் தரப் போகிறேன். மாயப் பொருள்களுக்கு மதிப்புத் தந்து மயங்குவது முட்டாள்தனம். இதை இவ்வுலகம் இருக்கும்வரை எடுத்துச் சொல்லும் பணியில் உங்களை அமர்த்தப்போகிறேன். இன்றிலிருந்து உங்கள் குலம் மணிகர்ணிகையில் மாய்ந்த உடல்களுக்கு எரியூட்டும் பணி செய்யட்டும். இறைவனடி சேர்பவர்களுக்குப் பணி செய்து ஈசனுக்கு நெருக்கமாக இருக்கலாம்... ''

அன்று அன்னையின் மணிகர்ணிகையை மறைத்துவைத்தவர்கள் தான் இன்று மாண்டு போனவர்களின் சிதைகளை எரிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

சக்தி பீடத்தில் விசாலாட்சியாக வரம் அருளும் அன்னை, புண்ணிய தலமான காசியில் இன்னும் பல கோயில்கள் கொண்டுள்ளாாள்.

கங்கை கரையிலிருந்து சற்று ஒதுங்கி தனக்கென ஒரு திருக்குளம் அமைத்துக் கொண்டு அன்னை ஆட்சி செய்யும் ஆலயம் துர்க்கா மந்திர் என்று அழைக்கப்படும் துர்க்கை கோயில்.

புனித கங்கையை ஒட்டிய கரையில் காசி விஸ்வநாதருக்கு நெருக்கமான ஒரு ஆலயத்தில், அன்னை சக்தி மாபெரும் மாட்சிமை கொண்டு வீற்றிருக்கிறாள்.

குழந்தையின் பசியறிந்து கூப்பிட்டு ஊட்டுபவள் அன்னையைத் தவிர வேறு யாராக இருக்க முடியும். மாங்கொட்டைக்குள் இருக்கும் வண்டுக்கும், பாறைக்குள் இருக்கும் தேரைக்கும் கூட அத்தனை உலகங்களையும் தன் கருப்பையில் சுமந்திருக்கும் பராசக்தி தானே பரிந்தூட்டுகிறாள்...? அலை நாயகனுக்கே அன்னை அன்னமிட்ட தலம் காசி.

வியாசர் அருளிய ஸ்கந்த புராணம் விசாலாட்சி மகிமை பற்றி விரிவாகப் பேசுகிறது.

மணிகர்ணிகை தீர்த்தத்தில் நனைந்து, மங்கல நாயகி விசாலாட்சியை தொழுதால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். அன்னையின் மகாபீடத்தில் அன்புடன் தானங்கள் செய்தால்... கன்னிகைகளுக்கு குணம் நிறைந்த கணவர்கள் கிடைப்பார்கள். தள்ளிப் போன திருமணங்கள் நடக்கும். திருமணமானவர்களுக்கு புத்திரப் பேறு கிட்டும். ' அன்னையை உண்மையாக வணங்கித் தொழுதால் முடிந்தபின் முக்தி கிடைக்கும் ' என்கிறார் முற்றும் அறிந்த முனிவர் வியாசர்.

சில உதவிக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| தலத்தின் பெயர் | : | காசி |
| சக்தியின் திருநாமம் | : | விசாலாட்சி |
| எங்கே உள்ளது | : | உத்தரப் பிரதேசத்தில் |
| எப்படிச் செல்வது | : | சென்னையிலிருந்து ரயில் மூலம்<br>டில்லியிலிருந்து விமானம் மூலம் |
| எங்கே தங்குவது | : | காசியில் நிறைய தங்கும் விடுதிகளும்<br>உணவு விடுதிகளும் உள்ளன. |
| தரிசன நேரம் | : | காலை 5.30 – 12.00<br>மாலை 4.30 – 9.00 வரை |

இன்றைக்கு உங்க வீட்ல என்ன? ஆட்டுக்கறியா? மீனா? இல்லை கோழிக்கறியா? என்று கேட்பவர்கள்தான் அதிகம். ஒரு விசேட நிகழ்ச்சி என்றால்கூட அவர்கள் விரும்புவது அசைவ உணவைத்தான். அசைவ உணவை சாப்பிடுவதை குறை சொல்லவில்லை. அதிலும் கூட மிளகாய் பொடியும், மசாலாப் பொடியும் கலந்து ருசிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமையானா அசைவம்தான் சாப்பிடனும்னு நினைக்கிற மாதிரி தினத்தில் சாப்பாட்டில் ஒரு கீரை சாப்பிடணுங்கிற எண்ணம் எல்லோருக்கும் வரணும்.

சைவ சாப்பாடு சாப்பிடுறவுங்கக் கூட வகை வகையாய் பலகாரம் செய்து சாப்பிடணும். பதார்த்தம் சாப்பிடனும்னு நினைக்கிறாங்க. நல்ல காய்கனிகளையும், சத்துள்ள கீரை வகைகளையும் எத்தனை பேர் சாப்பிடறாங்க...?

அப்படி சாப்பிட்டா ஏன் இன்றைய குழந்தைகளுக்கு பிஞ்சு வயசுலேயே தலைமுடி வெள்ளையாகுது? கண்ணாடி அணியும் அவலம் ஏன் ஏற்படுது. சொத்தப்பல்லு பாடாய் படுத்துது...?

அதாவது பசி ருசியறியாது என்பது வழக்கு. ருசிக்கு முக்கியத்துவம் கொடுக்குறவுங்கத்தான் இன்னும் அதிகம். அதுவும் வீட்டில் சமையல் செய்து சாப்பிடும் பழக்கம் நகர்ப் புறங்களில் குறைந்து வருகிறது. துரித உணவகங்களிலும், நட்சத்திர உணவகங்களிலும் சாப்பிடுவது வழக்கமாகவும் பொழுதுபோக்காகவும் கருதுகின்றார்கள்.

நாம் கண்டபடி சாப்பிட்டு உடலைக் கெடுத்து மருந்து செலவு செய்து அவதியுறுவதைவிட நல்ல கீரை வகைகளை சமைத்து சாப்பிட்டு நலமுடன் வாழலாமே !

## அகத்திக் கீரை

இது மர வகையைச் சேர்ந்தது. மாதம் ஒரு முறையாவது சமைத்து மதிய வேளையில் சாப்பிட வேண்டும். பருப்புடன் சாம்பார் அல்லது கீரை இரசம் வைத்து சாப்பிடலாம்.

பயன் : உடல் சூடு குறையும். அக(ம்) + தீ = அகத்தீ தணிக்கும் கீரை. பித்தம் குறையும். சித்தம் தெளியும். குருதி தூய்மையாகும். இந்தக் கீரை கசப்பு தன்மையுடையது. இதனால் புழுக்கள் மடியும். குடல் தூய்மையுறும்.

## அகத்திப் பூ

இதனைச் சமைத்து சாப்பிட புகைப்பழக்கம் உள்ளவர்கள் உடல் தீங்கு குறையும். உடல் வலிமையுறும்.

பயன் : அகத்திக் கீரை சாற்றை இரண்டு சொட்டு வீதம் மூக்கடைப்பு ( நீர்க் கொள்ளுதல், சளி ) உள்ளவர்களுக்கு மூக்கில் விட சளி வெளியேறும். சுவாசக் கோளாறு தீரும்.

## கொத்துமல்லி

கொத்துமல்லி இரசம், துவையல் செய்து சாப்பிடலாம். கொத்துமல்லி இலையுடன் இஞ்சி சேர்த்து சட்னி வைத்து சாப்பிடலாம்.

பயன் : இரும்பு சத்து, எளிய சீரண சக்தியை தரும். உடல் சூட்டை தணிக்கும். நாவறட்சியை குறைக்கும்.

## கொடிப் பசலைக் கீரை

இது தரையில் படர்ந்து வளரும். இக்கீரையை பறித்து பூண்டு கொஞ்சம் புளி சேர்த்து அரைத்து சாப்பிடலாம்.

பயன் : நீர் எரிச்சல் தீரும்


## பசலைக் கீரை

பருப்பு சேர்த்து சாம்பார் வைக்கலாம். கூட்டு செய்யலாம்.

பயன் : உடல் வலிமையும், பொலிவும் பெறும். சுண்ணச் சத்து மிகுந்தது. பல், எலும்பு வலுவுறும். சருமநோய்கள் குணமாகும்.

## அரைக்கீரை

அரைக்கீரையுடன் பூண்டு, வெங்காயம், மிளகு சீரகம் சேர்த்து பருப்பு கூட்டு வைத்து சாப்பிடலாம். கடைந்தும் உண்ணலாம். நல்ல சுவையைத் தரும்.



**பயன் :** சளியை அகற்றும். வலியை குறைக்கும்.

## கரிசலாங்கண்ணி

### மஞ்சள் கரிசாலை :

மஞ்சள் கரிசாலையை மிளகு, சீரகம், இஞ்சி, பூண்டு சேர்த்து வேகவைத்து பருப்புடன் சேர்த்தும், சிறிது புளி சேர்த்து சாம்பார் வைத்தும் சாப்பிடலாம். கோழிக்கறியின் சுவை மற்றும் மணம் தரும். நல்ல மணமும் சுவையும் மிகுந்தது.

**பயன் :** உடல் பொன்னிறமாகும். இரத்தத்தை தூய்மை செய்யும். கல்லீரல் பலம் பெறும். மஞ்சள் காமாலைக்கு அரிய மருந்தாகும். இளநரையைப் போக்கும்.

### வெள்ளைக் கரிசாலை

பருப்புடன் சாம்பார் வைத்து சாப்பிடலாம். தினமும் வெள்ளைக் கரிசாலை இலைகளைக் கொண்டு பல்துளக்கலாம்.

**பயன் :** காமாலை குணமாகும். இரத்த சோகை நீங்கும். பல்துளக்க ஈர் உறுதி பெறும். பல் வெண்மையாகவும் உறுதியாகவும் இருக்கும். இரத்தம் வடிதல் நிற்கும். வாய் நாற்றம் நீங்கும்.

### பொன்னாங்கண்ணி

பொன்னாங்கண்ணியில் நான்கு வகைகள் உண்டு. அவை

1. கொடிப் பொன்னங்கண்ணி
2. தரைப் பொன்னங்கண்ணி
3. சீமைப் பொன்னங்கண்ணி

என்ற வகைகள் உண்டு.

பொதுவாக அனைத்துக் கீரைகளையும் பருப்புடன் சேர்த்து சாம்பார், கூட்டு செய்து உண்ணலாம்.

**பயன் :** உடல் சூடு நீங்கும். கண்ணுக்கு குளிர்ச்சியைத் தரும். மூலநோய் உள்ளவர்கள் தினமும் உண்ண உடல் சூடு நீங்கி நோய் குணமாகும். பொன்னாங்கண்ணி சாப்பிட மேனி பொன்னாகும்.

## முருங்கைக் கீரை

முருங்கை இலையை பறித்து பருப்பு, சாம்பார் செய்து சாப்பிடலாம். அவசியம் புளிக் கூடாது. இரவில் சாப்பிடக் கூடாது.

**பயன் :** உடல் தீக்குற்றம் நீங்கும். நாவின் சுவையை கூட்டும். கண் குளிர்ச்சி பெறும். கண் பார்வைக்கு நல்லது.

## பிணமுருங்கை

இதன் இலையை வாழைப்பூ ( மொந்தன் ) வுடன் சேர்த்து வேகவைத்து சுண்டி சாப்பிட உடல் வாத வாயுக் கோளாறுகள் நீங்கும்.

## குப்பைக்கீரை ( முள்ளங்கிக் கீரை )

இது முளைக்கீரையைப் போலவே சிறிய முள்ளுடன் இருக்கும். இதன் இலை, தண்டு ஆகியவற்றை சமைத்து உண்ணலாம்.

**பயன் :** சரியாக மலம் போகாதவர்கள், மூலச்சூடு உள்ளவர்களுக்கு சிறந்தப் பயனைத் தரும். மலம் நன்கு வெளியேறும். நன்கு பசியெடுக்கும்.

## முளைக்கீரை

முளைக்கீரையை பூண்டு, மிளகு, சீரகம், இஞ்சி சேர்த்து வேகவைத்து கடைந்து உண்ணலாம்.

**பயன் :** நன்கு பசியெடுக்கும், நரம்பு முறுக்கேறும், காய்ச்சல் தீரும், கபத்தை அறுக்கும்.

## மணத்தக்காளி

இதன் இலையைப் பறித்து சாம்பார் மற்றும் கூட்டு செய்து சாப்பிடலாம்.

**பயன் :** உடல் சூடு ஏற்பட்டு, வாய் மற்றும் குடல் பகுதிகளின் கொப்புளங்கள் ஏற்பட்டு புண் உண்டானால் மணத்தக்காளி கீரை சமைத்துண்ண மேற்கூறிய நோய்கள் குணமாகும். மேலும் தேமல் உட்பட சரும நோய்கள் குணமாகும். பூரான் கடி போன்ற நஞ்சு கடிகளுக்கு நல்லது.

**குறிப்பு :** மணத்தக்காளி பழம் பறித்து சாப்பிட வாய்ப்புண் குணமாகும். உடல் நஞ்சை குணப்படுத்தும்.

## வெந்தயக் கீரை

வெந்தயக் கீரையை சமைத்துண்ண ஈரல் நோய்கள் குணமாகும். சிறுநீர் நன்கு வெளியாகும். வாதநோய் குணமாகும். சுண்ணச் சத்து கூடும்.

## தூதுவளை

தூதுவளை இலையை பறித்து நல்லெண்ணெயில் வதக்கி இஞ்சி வெங்காயம் சேர்த்து காலை பலகாரங்களுக்கு (இட்லி, தோசை) சட்னி வைத்து சாப்பிடலாம்.

**பயன் :** கபம் நீங்கும். இருமல் நோய் குணமாகும். சர்க்கரை நோய் தீரும். சரும நோய் குணமடையும். குரல் வளம் பெறும்.

## வல்லாரை

வல்லாரை துவையல் செய்து சாப்பிடலாம். வல்லாரை இரசம் வைத்து உண்ணலாம். வல்லாரை கூட்டு செய்தும் சாப்பிடலாம்.

**பயன் :** நரம்பு, மூளை ஆகியவற்றை புத்துணர்வு பெறச் செய்யும். மன சஞ்சலத்தை நீக்கும். ஞாபக சக்தியை அதிகரிக்கும். குரல் இனிக்கும்.

## முடக்கத்தான் கீரை ( முடக்கறுத்தான் )

முடக்கத்தான் கீரையை தினமும் காலை வேளைகளில் அரிசிமாவுடன் சேர்த்து அரைத்து இட்லி, தோசை செய்து சாப்பிடலாம். முடக்கறுத்தான், பூண்டு, சுக்கு, மிளகு சேர்த்து புளிக்குழம்பு வைத்து சாப்பிடலாம்.

**பயன் :** கைகால் மூட்டு வலியை நீக்கும். வாயு வலி நீங்கும். நன்கு பேதியாகும். முடத்தை நீக்கி திடத்துடன் வாழவைக்கும் முடக்கறுத்தான்.

## மூக்கிரட்டை

மூக்கிரட்டையை நல்லெண்ணெயில் விட்டு வதக்கி சாப்பிடலாம்.மூல நோயாளிகள் ஊறவைத்த அரிசி, கடலை பருப்பு ஆகியவற்றை அரைத்து பசு நெய்யில் மூக்கிரட்டை கீரையை சேர்த்து அடைசெய்து சாப்பிடலாம்.

**பயன் :** மூக்கு சளி நீங்கும். சுவாசக் கோளாறுகள் நீங்கிடும். மூல நோய் குணமாகும்.

## கல்யாண முருங்கை

கல்யாண முருங்கை இலையை ஊறவைத்த அரிசி மாவுடன் அரைத்து அடை தோசை செய்து உண்ணலாம்.

**பயன் :** தொடர் இருமல் குணமாகும். தொண்டைப் புண் ஆறும். சளி குறையும்.

## வேளைக்கீரை

வேளைக்கீரை வேளைக்குதவும். வேளக்கீரை, பூ ஆகியவற்றை பூண்டு, மிளகு, சுக்கு சேர்த்து புளிக்குழம்பு வைத்து உண்ணலாம்.

**பயன் :** தலை நோய் தீரும். தலைவலி நீங்கும்.

## புளிச்சக் கீரை

புளிச்சக் கீரையை பறித்து வேகவைத்து சிறிய வெங்காயம், இஞ்சி சேர்த்து கடைந்து விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் கலந்து தாளிதம் செய்து அனைத்து வேளையிலும் உண்ணலாம்.

**பயன் :** இரும்பு சத்து கூடும். கல்லீரல் பலம் பெறும். மாலைக் கண் தீரும். ஆயுள் கூடும்

## தும்பை

தும்பை இலையை பறித்து பூண்டு, மிளகு, புளி சேர்த்து கடைந்து சாப்பிடலாம்.

**பயன் :** வெள்ளை வெட்டை குணமாகும். உடல் சோம்பல் தீரும். கண் பார்வை தெளிவாகும். நஞ்சுக்கடி குணமாகும்.

## புதினா

புதினா இரசம், துவையல், சட்னி செய்யலாம்.

**பயன் :** இரத்தம் தூய்மையாகும். செரிமானம் தரும். வாய் நாற்றத்தை போக்கும்.

## வாகைக் கீரை ( வாத நாராணயணன் )

வாகைக் கீரையை வாழைப் பூவுடன் சேர்த்து பொறியல் செய்து சாப்பிடலாம்.

**பயன் :** அனைத்து வாத வலியும் குறையும். குடற்புண் ஆறும்.

மேற்கண்ட கீரைகளில் தினமும் எளிதில் கிடைக்கக் கூடிய ஏதாவது ஒரு கீரையை உணவில் சேர்த்து உடலை நலமாக்குவோம்.

### நம்பிக்கை மூலை

ஒரு கப்பல் கவிழ்ந்தது. சிரமப்பட்டு நீந்தி ஒரு தீவுக்குள் சேர்ந்தான் அந்த மனிதன். ஆளரவமற்ற தீவு அது. தாவரங்களை உண்டான். தட்டுத் தடுமாறி ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டான். சிக்கி முக்கிக் கற்களை உரசி நெருப்பை உண்டாக்கி சமையல் செய்தான்.

கடவுளுக்கு தன் மேல் கொஞ்சமாவது கருணை இருக்கிறதே என்று கருதிக் கொண்டே காய் கனிகள் பறிக்கச் சென்றவன் திரும்பி வந்து பார்த்த போது அவன் குடிசை பற்றி எரிந்து கொண்டிருந்தது.

கடவுளே உனக்குக் கருணையே இல்லையா! அல்லது நீயே இல்லையா என்று கதறினான். சிறிது நேரத்தில் அவனைக் காப்பாற்ற ஒரு கப்பல் வந்தது. ஆச்சரியம் அவனுக்கு! நான் இங்கே இருப்பது எப்படித் தெரியும் என்றான்.

தீவிலிருந்து புகை எழுந்ததை வைத்து யாரோ இருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டோம் என்றார் கப்பலின் தலைவர்.

சோதனைகள் பெரும்பாலும் நம்மைக் காப்பாற்றுவதற்காகவே ஏற்படுகின்றன.



# பங்குனி மாதப்பலன் (மார்ச் 15 - ஏப்ரல் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** பல மொழி பேசினாலும் தாய் மொழி மறவாதவர்களே! மத்தியப் பகுதி வரை உங்களுக்கு அலைச்சலும், செலவும் வந்து போகும். உங்களைப் பற்றி பலரும் விமர்சிப்பார்கள். கவலை வேண்டாம். சுக்ரன் வலுவாக இருப்பதால் சமயோசித புத்தியால் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். வேலையாட்களால் பிரச்சினைகள் வந்து செல்லும். புது முதலீடுகளை மாதப் பிற்பகுதியில் செய்யுங்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. மனைவியால் மகிழ்ச்சி கூடும் மாதம்

**இடபம்** யதார்த்தமாக பேசுபவர்களே! சூரியன் லாப வீட்டில் நிற்பதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். வீண் குழப்பம் விலகும். ஆடை, ஆபரணம் சேரும். வீடு, மனை, வாகனம் வாங்குவீர்கள். மாத மத்தியிலிருந்து மனைவியின் உடல் நிலை சீராகும். பிள்ளைகள் உங்கள் வார்த்தையை கேட்டு நடப்பார்கள். வேலை கிடைக்கும். காதல் இனிக்கும். வீட்டில் சுப காரியம் நடக்கும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் அடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்யோகத்தில் உயர் அதிகாரிகள் மதிப்பார்கள். பதவி உயரும். சாதிக்கும் மாதம்

**மிதுனம்** நடுநிலை தவறாமல் எதையும் செய்பவர்களே! 14ஆம் தேதி வரை செவ்வாய் எட்டில் நிற்பதால் வீண் விவாதங்கள், விரையங்கள் விபத்துகள் வந்துபோகும். 15ஆம் தேதி முதல் எதிர்பாராத பணவரவு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும். விபத்துக்கள் விலகும். சூரியன், சுக்கிரன் வலுவாக இருப்பதால் எதிர்பார்த்த பணம் வரும். அரசு அதிகாரிகள், வி.ஐ.பிக்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். பங்கு தாரர்களை அனுசரித்துப் போவது நல்லது. உத்யோகத்தில் வேலைச் சுமை குறையும். புது வாய்ப்புகள் வரும். பிற்பகுதி இனிக்கும் மாதம்

**கடகம்** காரியத்தில் கண்ணாக இருப்பவர்களே! குருபகவானின் திருவருள் நன்றாக இருப்பதால் தொட்ட காரியங்கள் துலங்கும். எதிர்பார்த்த பணம் வரும். தடைகள் நீங்கும். வேலை கிடைக்கும். காதல் அரும்பும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடியும். 14ந் தேதி முதல் செவ்வாய் ராசிக்கு எட்டில் வருவதால் வீண் அலைச்சல், மனக்குழப்பம், சின்னச்சின்ன விபத்துக்கள் வந்து போகும். மற்றவர்களின் விவகாரங்களில் தலையிட வேண்டாம். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்யோகத்தில் மதிப்பு கூடும். முற்பகுதியில் முன்னேறும் மாதம்

**சிம்மம்** தொலைதூரச் சிந்தனை உடையவர்களே ! உங்கள் ராசிநாதன் சூரியனை குரு பார்ப்பதால் மன உளைச்சல் நீங்கும். நோய் விலகும். அழகு, ஆரோக்கியம் கூடும். ஆடை, அணிகலன் சேரும். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் வாக்குவாதங்கள் வந்தாலும் ஒற்றுமை குறையாது. வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். பங்கு தாரர்களை அனுசரித்துப் போவது நல்லது. உணவு, இரும்பு வகைகள் லாபம் தரும். உத்யோகத்தில் எதிர்ப்புகள் நீங்கும். புது சலுகை கிடைக்கும். உடன்பிறந்தவர்களை அனுசரித்துப் போங்கள். மிதமான நன்மை தரும் மாதம்

**கன்னி** கலக்கமான மனசையும், கலகலப்பான பேச்சால் மாற்ற வைப்பவர்களே! ராகு வலுவாக இருப்பதால் வேற்று மதத்தினர், மொழியினர் உதவுவார்கள். உங்கள் ராசிநாதன் கொஞ்சம் வலிமை குறைந்து காணப்படுவதால் உடல் நலத்தில் கவனம் தேவை. தூக்கமின்மை, கனவுத்தொல்லை வந்துபோகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பிள்ளைகளால் அலைச்சலும், கவலையும் வந்து செல்லும். கர்ப்பிணிப் பெண்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் உயர்வு உண்டு. வேறு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். அலைச்சலும் ஆதாயம் தரும் மாதம்.

**துலாம்** தோல்வி கண்டு துவளாதவர்களே! உங்கள் ராசிநாதன் உங்கள் ராசியையே பார்ப்பதால் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். அம்மாவின் உடல்நிலை சற்று பாதிக்கும். வீடு வாங்குவது, கட்டுவது லாபகரமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். அரசால் அனுகூலம் உண்டு. பழைய கடன் தீரும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். எதிலும் வெற்றி பெறும் மாதம்.


**விருச்சிகம்** தாய் மண்ணை மதிப்பவர்களே ! உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். சுக்ரன் பலவீனமாக இருப்பதால் செலவினங்கள் அதிகமாகும். மனைவியின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்வது நல்லது. பிள்ளைகளால் கொஞ்சம் அலைச்சல் செலவு இருக்கும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அரசால் ஆதாயம் உண்டு. புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்யோகத்தில் நிம்மதி கிட்டும். தொண்டைவலி, சளித்தொந்தரவு வந்து நீங்கும். சற்றே நிதானம் தேவைப்படும் மாதம்.

**தனுசு** தாராள மனசு உள்ளவர்களே! மாதத்தின் மத்தியப் பகுதியில் இருந்து உங்களின் வருமானம் உயரும். பேச்சில் நிதானம் வரும். முன்கோபம், காரியத்தடைகள் விலகும். ஆடை, ஆபரணம் சேரும். வி.ஐ.பிக்கள் உதவுவார்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதரி உதவுவார். குழந்தைபாக்யம் கிட்டும். வேலை கிடைக்கும். வியா பாரத்தில் உங்கள் ராஜ தந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் வெற்றியடையும். எதிர்பாராத திடீர் திருப்பங்கள் நிறைந்த மாதம்.


**மகரம்** அன்புக்கும், மரியாதைக்கும் அடிமையான வர்களே! உங்கள் ராசிக்குள்ளேயே நிற்கும் செவ்வாய் 14ந் தேதிக்கு பின்பு ராசியை விட்டு விலகுவதால் எதிலும் வெற்றி கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் பலிதமாகும். பிரபலங்களின் நட்பு கிட்டும். ஆடை, ஆபரணம் சேரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. உறவினர்கள் மதிப்பார்கள். வீடு, வாகனச் சேர்க்கை உண்டு. உத்யோகத்தில் சம்பளம் உயரும். பிற்பகுதியில் சாதிக்கும் மாதமிது.

**கும்பம்** வெள்ளை மனசு உள்ளவர்களே! உங்களின் ராசிநாதன் வலுவாக இருப்பதால் சங்கடங்கள் நீங்கும். பேச்சில் மட்டும் நிதானம் தேவை. கண் பார்வை கோளாறு வந்து போகும். சுக்ரனால் ஆடை, ஆபரணம் சேரும். வேலை கிடைக்கும். யாருக்காவது ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். தரகு மூலம் பணம் வரும். பிரபலங்களின் நட்பு கிட்டும். வழக்குகளில் வெற்றி கிட்டும். பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப்பிடிப்பது நல்லது. வியாபாரம் சூடு பிடிக்கும். உத்யோகம் மகிழ்ச்சி தரும். முயற்சியால் முன்னேறும் மாதம்.

**மீனம்** எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களே! தன வீட்டில் சுக்ரன் நிற்பதாலும் ஒன்பதில் குரு இருப்பதாலும் பணப்புழக்கம் அதிகரிக்கும். பேச்சில் தத்துவம் பிறக்கும். மனைவி வழியில் மகிழ்ச்சி பொங்கும். சொத்து சேரும். நல்ல இடத்தில் வேலை கிடைக்கும். வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத பணவரவு உண்டு. புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்யோகத்தில் சம்பளம் உயரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வசதி, வாய்ப்புகள் பெருகும் மாதம்.


Tharani
Jewellery
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777


GOLDMAN
ESTATE
Property Sales
Property Lettings
Property Management
Commercial Loan Arrangement
Life Insurance
Mortgages
Accountancy
Pensions
Accountancy
S. Manoharan
FCMA ACMI
V Theebaraj
Mortgages
S Mani
Sales & Lettings
உங்கள் வீடு.... உங்கள் வளம்.... உங்கள் மனநிறைவு
219 Broadway, Southhall, Middlesex, UB1 1NB
Tel : 020 8867 7711 020 8867 7733 Fax : 020 8867 7722 020 8867 7744
www.goldmanfinance.com www.goldmanestate.com
info@goldmanfinance.com info@goldmanestate.com
Your home is at risk if you do not keep up your repayment in a mortgage or other loan secured on it














இந்த இடத்தில்
உங்கள்
விளம்பரம்
இடம்பெற
பவுண் 35
மட்டுமே



# ஒன்று கொடுத்தால் நான்கு தருவான் திருப்பதியான்

## இப்படி வைஷ்ணவர்கள் கூறுவார்கள்

ஈழத்து சைவ மக்கள் பெரிய மனம் படைத்தவர்கள். அவர்கள் கடவுளை கும்பிடுவதில் வஞ்சகம் செய்ய மாட்டார்கள். உலகத்தில் பெரிய வருமானம் உள்ள கோயில் வாட்டிகன் கோயில். அதற்கு அடுத்ததாக திருப்பதி கோயிலைக் கூறுவார்கள். இந்தியாவுக்கு வரும் அன்பர்கள் அனைவரும் ஆறுபடை வீடு, சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை மீனாட்சி, மேல்மருவத்தூர், புட்டபர்த்தி சாய்பாபா இவர்களுடன் திருப்பதியையும் சேர்த்துக் கொள்வார்கள். இவற்றையெல்லாம் பார்த்தால்தான் எங்கள் மக்களின் மனம் சந்தோஷப்படும். ஆகவே சென்னைக்கு வந்தால் சென்னையிலிருந்து முதன்மையாகப் பார்க்க வேண்டிய கோயில்களில் திருப்பதி அவர்களுடைய அட்டவணையில் இருக்கும். இந்த அட்டவணைக்கு நான் விதிவிலக்கானவன் அல்ல. 72ஆம் ஆண்டு நான் தமிழ்நாட்டுக்கு வந்த போது சென்ற இடங்களில் திருப்பதியும் ஒன்று. எனக்கு தர்ம தரிசனம் பார்க்க 23 மணி நேரம் நீண்ட வரிசையில் நிற்க வேண்டியதாயிற்று. எந்த வசதியும் இல்லாத அந்த வரிசையில் நின்று திருப்பதியானை தரிசிக்க கோயிலுக்குள் போனால் ஒரு 3 வினாடி கூட எங்களை அங்கே நிற்க விட மாட்டார்கள். அது எப்படி தெய்வம், என்ன அலங்காரம் என்று மேலிருந்து கீழ் வரை கூட பார்க்க முடியாதபடிதான் இருக்கும். இது முறையல்ல. இப்படி 10 தடவைகள் எனக்கு நேர்ந்துள்ளது. இந்த காரணங்களால் திருப்பதிக்கு நான் செல்வதை நிறுத்தி விட்டேன். சென்ற வருடம் திருச்செந்தூர் கந்தசஷ்டியை முடித்துக் கொண்டு சென்னைக்கு வந்து போது எனது அன்புக்குரிய நண்பர் திருப்பதிக்கு வா, சென்று தரிசித்து வருவோம் என்று கூறினார். ஐயா அந்த நீண்ட வரிசையில் நான் நிற்க முடியாது என்று கூறினேன். அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வா என்று என்னை அழைத்துச் சென்றார். சென்னையிலிருந்து திருப்பதி 130 கிலோ மீற்றர்கள் மட்டும். 3 மணி நேரத்தில் அங்கு சென்று விடலாம். திருப்பதி தெய்வம் வெங்கடாஜலபதிக்கு அபிஷேகம் ஒரு கிழமையில் ஒரு நாள் மட்டும் (வெள்ளிக்கிழமை) என்பது குறிப்பிடத்தக்கது. சைவத்திருக்கோயில்களில் உள்ள சிவனுக்கு தினமும் அபிஷேகம் நடக்கும். 52 கிழமை மட்டும்தான் திருப்பதியில் இந்த அபிஷேகத்தை பார்க்க முடியும். வெள்ளிக்கிழமை அதிகாலை மூன்று மணிக்கு அபிஷேகம் தொடங்கி அரை மணி நேரம் தொடர்ந்து நடைபெறும். அதிகாலை 5 மணிக்கு நிசபாத தரிசனம் என்னும் ஒரு தரிசனம் (எந்தவிதமான அலங்காரமும் இல்லாமல்) கிடைக்கும். அதன் பிறகு 8 மணிக்கு சகல விதமான ஆபரணங்களுடன் அவருக்கு அலங்காரம் நடக்கும். இந்த அலங்கார காட்சிதான் சாதாரணமாக மக்களுக்கு பார்க்க கிடைக்கும். ஒரு காலத்தில் வரிசையில் நின்ற நாங்கள் தரிசனத்துக்குரிய நேரம், காலம் குறிக்கப்பட்டு இத்தனை மணி நேரத்தில் இந்த காலத்தில் உங்களுக்குத் தரிசனம் கிடைக்கும் என்று கூறி எங்களை மண்டபத்தில் உட்கார வைத்து அனுப்புகிறார்கள். எனது நண்பர் வெள்ளிக்கிழமை அன்று விடிகாலை மூன்று மணி அபிஷேகம் பார்ப்பதற்கு எங்களை அழைத்துச் சென்றார். அவரது பூரண அபிஷேகத்தைப் பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இந்த கோயில் அன்றும் இன்றும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அதன் சுற்றுப்புறம் எல்லாம் மிகவும் திருத்தப்பட்டு உன்னதமாகக் காட்சியளிக்கிறது.

ஒரு நாளைக்கு உண்டியலில் ஒரு கோடி ரூபாய் வரை சேர்வது குறிப்பிடத்தக்கது. இந்த அபிஷேகம் பார்ப்பதற்குரிய கட்டணத்தை கோயிலுக்கு நிரந்தர வைப்பாக வைத்தால் வருஷத்தில் 52 வெள்ளிக் கிழமையில் ஏதாவது ஒரு வெள்ளி அபிஷேகம் பார்ப்பதற்கு அனுமதி கிடைக்கும். இந்த அனுமதியை எனது நண்பர் பெற்று வைத்திருந்தார்.

திருப்பதியானைத் தரிசிக்கும் நண்பர்கள் பலவிதமான கருத்துக்களைச் சொல்லுவார்கள். யானை பார்த்த குருடன் மாதிரி ஒவ்வொருத்தரும் தங்களுடைய அனுபவத்தை சொல்வார்கள். பூரணமாக இப்படிக் காணும்




காட்சி ஒரு சிலருக்குத்தான் கிடைக்கிறது. திருப்பதியை தரிசித்து விட்டு வரும் வழியில் காளஹஸ்தி, திருத்தணி ( ஆறுபடைவீடுகளில் ஒன்று ) பார்த்துவிட்டுச் சென்னைக்கு வந்தோம். திருப்பதி வெங்கடாசலபதி சைவ மக்களுக்குரிய தெய்வமாக இல்லாவிட்டாலும் கூட சைவ மக்களால் மிகவும் நம்பிக்கைக்குரிய தெய்வமாகப் போற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

லண்டனில் பெர்மிங்ஹாம் பகுதியில் வெங்கடாசலபதிக்கு ஒரு கோயில் பூரணமாகக் கட்டப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இதில் என்ன விசேடம் என்றால் அந்தக் கோயிலுக்கு முன்னால் பிள்ளையாருக்கும், முருகனுக்கும் தனித்தனியே முறையான கோயில்கள் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு அருமையான அமைப்பில் அமைந்திருக்கிறது. இது எல்லா சைவ மக்களும் தரிசிக்க வேண்டிய ஒன்று.

அடுத்த இதழில் சீரடி சாய்பாபா, புட்டபர்த்தி சாய்பாபா பற்றி............




Anthoorium
World of Designs
Jewellery & Textiles
For your Jewels, Gems, Sarees, Costumes, Musical Instruments & Gift Items please visit us...
102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk


EVEREST
Curry King
24 Loampit Hall
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
Breakfast
Lunch
Dinner
Sea Food &
Vegetarian Specialist


புதிய பொலிவுடன் லூசியத்தில்
கற்பகம்
KATPAGAM
ஞாயிறு
தோறும் உடன்
பங்கு
ஆட்டிறைச்சி
சகலவிதமான
மரக்கறி
வகைகள்
பழவகைகள்
உட்பட
சகல
தேவைகளுக்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்
துரிதப் பணமாற்றுச் சேவை
ரஞ்சன
இலண்டன்
36, Loampit Hill, Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810


GJ Video Club
TAMIL, HINDI, TELUGU, SINGALA
VHS VCD & DVD WHOLESALE & RETAIL
Tel : 020 8471 6500
விடியோ மாபெரும்
கிருஸ்துமஸ்
மலிவு
விற்பனை
ஒன்று வாங்கினால்
மற்றது ½ விலை
By One get
One ½ Rate
317, High Street North
ManorPark London E12 6SL


home2u
ESTATE AGENTS LEWISHAM
Formally known as
Shelter 4U
sales
lettings &
property management
mortgages
வீடுகள் வாங்க, விற்க, சிறந்த
பராமரிப்போடு வீடு வாடகைக்கு விட அணுகுங்கள்
வீடு வாங்க வசதிகள் செய்து தரப்படும்
K. Vinotharan B.Eng.
Director
83 Ladywell Road
Lewisham
London SE13 7JA
Tel : 020 8690 5000
Mob : 07949 026 917
Fax : 020 8314 1111
info@home2u.co.uk
vino@shelor4u.co.uk
www.home2u.co.uk


புதிய நிர்வாகத்தின் கீழ்
Maharasie
Jewellers
122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel : 020 8691
Video Audio
14 Lompait Hill
Lewisham
London SE13
Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers, Phone Cards

ESTD 1992

# SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

## Solicitors & Estate Agents

**Property Sales, Letting & Conveyancing Under One Roof**

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Tel : 020 8795 0648

Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979



லண்டனில்
பொற்கை வண்ணர்களின்
நிர்வாகத்தில் இயங்கும்
ஒரே நகை மாடம்



# MIERRA

Jewellery Mart

*Gems & Jewellery*

34 London Road Tooting London SW 17 9HP
Tel: 020 8648 7750 Mobile: 07958948685
www.meera_jewellery.com



# CHANDRA

## Super Market & Off Licence

உங்களுக்குத் தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள், பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர் வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள ஒரே இடம். ஆடியோ, வீடியோ, சீ.டி, வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.



Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford, London SE6 2PG



# SELECT

ESTATE LETTINGS

Residential & Commercial Sales
Professional Service
Rent Guarantee Scheme
Vetted Tenants
In-house Maintenance Dept
Competetive Sales Commission
Business Transfer
Mortgages Arranged even with no proof of income

*Sales*
*Mortgages*
*Lettings*

Tel : 020 8470 1500
Fax : 020 8470 9800
www.selhouses.co.uk
email : info@selhouses.co.uk

288 High Street North, Manor Park, London E12 6SA

# ஒரே கல்லில் மூன்று மாங்காய்

## சுப. வீரபாண்டியன்



ஈழ நெருக்கடியில் தமிழக அரசின் தற்போதைய நிலை என்ன, என்னும் கேள்வி இப்போது பரவலாக எழுந்துள்ளது. ஈழத்திற்கு ஆயுதம் கடத்தியவர்கள் என்று சொல்லித் தமிழ்நாட்டில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கெடுபிடியான சோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை போதாதென்று, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களின் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென முதலமைச்சர் கண்டிப்பான அறிக்கை ஒன்றினையும் வெளி யிட்டுள்ளார். இந்தச் சூழலில் தான் மேற்காணும் கேள்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

இன்னொரு பக்கம் பார்த்தால், தினமலர், துக்ளக் போன்ற நாள், வார ஏடுகள் கருணாநிதியின் ஆட்சி வந்தாலே புலிகளின் நடமாட்டம் அதிகமாகிவிடும் என்று குற்றம் சாட்டுகின்றனர். கருணாநிதி மறைமுகமாகப் புலிகளை ஆதரிக்கிறார் என்பது இவை போன்ற பத்திரிக்கைகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு. இவ்வாறு நேர் எதிரான இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு தமிழக அரசு ஆளாகி உள்ளது.

இவை இரண்டில் எது உண்மை என்பது ஒருபுறமிருக்க திடீரென்று இப்படி ஒரு சூழல் எதனால் ஏற்பட்டு உள்ளது என்பதை நாம் கண்டறிய வேண்டியுள்ளது.

1991-ஆம் ஆண்டிற்குப் பிறகே, தமிழக, இந்திய அரசுகளின் போக்கு புலிகளுக்கு எதிராகவும், ஈழ விடுதலைக்கு எதிராகவும்தான் இருந்து வந்துள்ளது. மிகக் கடுமையாக இருந்த அப்போக்கில், மிக அண்மையில் தான் ஒரு மாற்றம் தென்படத் தொடங்கியது. ஏறத்தாழ 16 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அரசு முதன்முதலாக இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களோடு பேச்சு நடத்தியது. அந்தச் சந்திப்புக்குத் தமிழக அரசு, குறிப்பாக தமிழக முதல்வர் முழுமையாக உதவினார். இரண்டு அரசுகளிடமும், ஈழத்தை நோக்கிய ஒரு நல்ல திருப்பம் தென்பட்டது. இந்தியப் பிரதமரும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்த மறுநாள், தில்லியில் உள்ள பத்திரிக்கைகள் யாவும் அது குறித்து விரிவாக எழுதி இருந்தன. புலிகள் தொடர்பான இந்திய அரசின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு உள்ளதாக ("Policy shift on tigers") அவை குறிப்பிட்டிருந்தன.

இந்த நிலை, இந்தியாவில் உள்ள சிங்கள ஆதரவாளர்களின் கண்களை உறுத்தியது. குறிப்பாக சிறீலங்கா அரசினால், ' சிங்கள ரத்னா ' விருது பெற்ற இந்து ராம் போன்றவர்களால் அதனைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. பொதுவாகவே தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள பார்ப்பனப் பத்திரிகைகள் புலிகளின் மீது கடுங்கோபம் கொண்டவர்கள். தில்லியில் உள்ள பார்ப்பன அதிகாரிகள் சிலரும் அந்தப் போக்கு உடையவர்களே. அவர்களில் சிலர் அரசாங்கத்தின் மிக முக்கியமான பொறுப்புகளை வகிப்ப வர்களாகவும் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரு அறிவிக்கப்படாத கூட்டணியைத் தங்களுக்குள் அமைத்துக் கொண்டனர். இரண்டு அரசுகளின் போக்குகளையும் எப்படியாவது மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது அவர்களின் எண்ணம்.

இந்தியாவின் நிலை இவ்வாறிருக்க, ஈழத்திலும் காட்சிகள் மாறத் தொடங்கின. 2002-பிப்ரவரி 22-ஆம் தேதி, சிங்கள அரசுக்கும், புலிகளுக்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. கடந்த 22-ஆம் தேதியோடு அவ்வொப்பந்தம் கையெழுத்தாகி ஐந்தாண்டுகள் நிறைவடைந்தன. போர் ஏற்படுவதற்கான சூழல் உருவாகிக் கொண்டிருப்பதை இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் கணிக்கத் தொடங்கின.

இந்திய அதிகாரிகள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள சில பத்திரிக்கைகளைக் கொண்ட ஒரு வட்டம், இந்தக் கட்டத்தில் தங்களின் கைவரிசையைக் காட்டத் தொடங்கின. தமிழகத்தில் மீண்டும் புலிகளின் நடமாட்டம், தமிழகம் புலிகளின் ஆயுதக் கிடங்காகிறது என்பன போன்ற செய்திகளைத் தொடர்ந்து வெளியிட ஆரம்பித்தன. அங்கொன்றும், இங்கொன்றுமாக சில ஆயுதங்கள் பிடிபட, அவற்றை ஊதிப் பெரிதாக்கி உலகத்திற்குக் காட்டின. மக்கள் இடையேயும் பெரும் ஆயுதப் பரிமாற்றம் நடந்துகொண்டு இருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. ஆனால் உண்மையில் இந்திய அரசிடமிருந்து, சிங்கள அரசுக்குச் சில ஆயுதங்கள் பரிமாற்றப்பட்டன என்பதே மெய்யாகும்.

சதிகாரர்களின் திட்டம் ஒரு வகையில் இங்கு வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறது

என்பதே நாட்டு நடப்பாக உள்ளது. அவர்கள் ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் புலிகளுக்கான ஆதரவு நிலையைச் சரியச் செய்வது என்பது முதல் திட்டம். தமிழக மற்றும் இந்திய அரசுகளின் போக்குகளில் எந்த நெகிழ்வும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது இரண்டாவது திட்டம். ஈழத் தமிழ் மக்களுக்கும், புலிகளுக்கும் எதிராகக் கலைஞர் அரசு நடந்து கொள்கிறது என்னும் எண்ணத்தைத் தமிழ் உணர்வாளர் களிடமும், தமிழ் ஈழ ஆதரவாளர்களிடமும் ஏற்படுத்துவது மூன்றாவது திட்டம். இந்த மூன்று திட்டங்களும் இன்று மெல்ல மெல்ல நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

இந்நேரத்தில் இந்த சூழ்ச்சிக்கு முற்றிலும் ஆளாகிவிடாமல் தமிழக மக்களிடம் உண்மையைக் கொண்டு செல்ல வேண்டிய கடமை தமிழ் உணர்வாளர்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும் உள்ளது. அந்தப் பணி அவ்வளவு எளியதன்று என்றாலும், கட்டாயம் நிறைவேற்றி ஆக வேண்டிய செயல் ஆகும்.

தமிழகத்தில் உள்ள தமிழ் உணர்வாளர்கள் இத்தருணத்தில் இரண்டு வெவ்வேறுபட்ட கடமைகளை ஆற்றவேண்டியவர்களாக உள்ளனர். ஒன்று, தமிழக மற்றும் இந்திய அரசுகளை, ஈழ மக்களுக்கு ஆதரவாகக் கொண்டுவர வேண்டிய கடப்பாடு உள்ளது. பார்ப்பனப் பத்திரிக்கைகள் பின்னும் சதிவேலைக்கு அஞ்சி, ஈழப் போராட்டத்தில் மீண்டும் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து விடாமல் அரசுகளைத் தடுத்தாக வேண்டி உள்ளது. இது உடனடிக் கடமையாகும்.

இக்கடமையை நிறைவேற்ற வேண்டுமானால் மக்களிடம் ஒரு தெளிவையும், ஈழ ஆதரவு உணர்வையும் ஏற்படுத்தியாக வேண்டும். ஈழ மக்களையும், அவர்களின் போராட்டத்தையும் ஆதரிப்பது தமிழ் உணர்வின்பால் கொண்டது என்பது மட்டுமல்லாமல், அது நியாய உணர்வின் பால் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதையும் உணர்த்த வேண்டும். தமிழ் மக்களிடம் விழிப்புணர்ச்சியும், அதன் விளைவாகப் பேரெழுச்சியும் ஏற்படுமானால், அரசுகள் ஈழத்திற்கு ஆதரவாக தங்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும்.

இந்தப் புரிதல் இல்லாமல், தமிழ் உணர்வாளர்கள், கலைஞரையும், தமிழக அரசையும் எதிரிகளாக எண்ணி மோதுவார்கள் ஆயின், அது சதிகாரக் கூட்டத்திற்கே துணை புரிவதாக அமையும். எதிரிகளின் வேலை எளிதாக முடியும். அதற்குத் தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ ஆதரவாளர்கள் ஒரு நாளும் இடம் கொடுத்து விடக்கூடாது.

**திராவிட இயக்க தமிழர் பேரவை தொடக்கவிழாவிலிருந்து எடுக்கப்பட்ட சில புகைப்படகாட்சிகள்**










22.01.2007 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில், சுப. வீரபாண்டியனை அமைப்பாளராகக் கொண்டு திராவிட இயக்கத் தமிழர் பேரவை தொடங்கப்பட்டது. தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அமைப்பைத் தொடக்கிவைக்க, நடிகர் சத்யராஜ், நக்கீரன் கோபால் இயக்குநர் சீமான், வழக்குரைஞர் அருள்மொழி உள்ளிட்ட பலர் வாழ்த்துரை நிகழ்த்தினர்



# Arthy Jewellers

ஆயிரங்காலத்துப் பயிருக்கு
ஆண்டாண்டு பாரம்பரியம்
உள்ள தங்க நகைகள்

294 High Street North
Eastham London E12 6SA
Tel : 020 8552 1080

திங்கள் அன்று விடுமுறை

BEST FOOD

## BEST FOOD Supermarket

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577

## BEST FOOD Supermarket

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

## BEST FOOD Supermarket

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323


Mithus Jewellery
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792
Diamonds Palace
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814
Sindu Mahal
இப்போது எங்கள் சேவையை விரிவாக்கியுள்ளோம்
திருமணமா !
பூப்புனித நீராட்டு விழாவா !
பிறந்த நாள் விழாவா !
எந்த விழாவையும்
சிறப்பாக
நடத்தித்தர காத்திருக்கிறோம்
274 Barking Road Eastham
London E6 3BA
Tel : 020 8471 6226
Mob : 07984 423 284 07830 361 317
07951 418 145